# பரிபூரண ஜீவன்
# PARIPOORANA JEEVAN



## தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது

தானியேல் 6:28


THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

September - October 2025
Volume : 65

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 5

# 77th Annual Conference, Madurai




























ஆசிரியரிடமிருந்து........!

## தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது
(தானியேல் 6:28)



வேதத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க மனிதர்களில் ஒருவர் தானியேல். அவர் பூமியின் ராஜாக்கள் முன்பு துணிவுடனும், ராஜாதி ராஜாவாகிய கர்த்தருக்கு முன்பாக தாழ்மையுடனும் இருந்த மனிதன். எருசலேமில் இருந்து ஒரு இளைஞனாக ஒரு புறமத சாம்ராஜ்யத்திற்குள் அடிமையாக கொண்டுவரப்பட்ட தானியேலின் வாழ்க்கை சுமார் 70 ஆண்டுகள், 4 ராஜாக்களின் கீழ் ஜெயமாகவே இருந்தது. மிகவும் கடினமான, விரோதமான சூழ்நிலைகளிலும் தேவனுக்கு உண்மையாக இருப்பதும் ஜெயமாக வாழ்வதும் சாத்தியம் என்பதற்கு தானியேல் ஒரு நல்ல சான்றாகும். தானியேலின் வாழ்க்கையில் மூன்று குணங்கள் பிரகாசமாக ஜொலிக்கின்றன. நம்முடைய வாழ்விலும் அவைகள் காணப்படுமானால் நாமும் ஜெயமுள்ள வாழ்க்கை வாழ முடியும்!

### வேதாகமக் கொள்கைகளை உடைய மனிதன்
### MAN OF PRINCIPLES

தானியேல் யூதா தேசத்திலிருந்து பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டு செல்லும்போது ஓர் இளைஞனாக (சுமார் 15-17 வயது) இருந்திருக்க வேண்டும் என்று வேதபண்டிதர்கள் கூறுகின்றனர். தன் இளவயதில் தேவனுக்காக வைராக்கியமாக ஜீவிக்கும்படி உறுதியான தீர்மானமும் வேதத்தின் அடிப்படையிலான கொள்கைகளை உடையவனுமாயிருந்தான். பாபிலோனியர்கள் தானியேலின் மொழி மற்றும் பெயரை மாற்றினர் (தானியேல் 1:4-7). ஆனால் அவன் கொண்டிருந்த இறை நம்பிக்கைகளை மாற்ற முடியவில்லை. தானியேல் 1:8 கூறுகிறது, **'தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சைரசத்தினாலும் தன்னை தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணினான்.'**

தானியேலின் இந்த முடிவு ஏதோ ஒரு சாதாரண தனிமனித விருப்பமல்ல. இது அவரது விசுவாசத்தில் வேரூன்றிய ஒரு கொள்கைரீதியான தீர்மானமாகும். தானியேல் சிறு வயதிலிருந்தே கர்த்தருடைய வசனத்தை, குறிப்பாக மோசேயின் நியாயப்பிரமாணத்தை அறிந்திருந்தார். ராஜாவின் உணவு யூத சட்டத்தின்படி அசுத்தமானதாகவும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதாகவும் இருந்தபடியால் அதை உண்பது உலகத்தோடு சமரசம் செய்வதற்கு ஏதுவாக கருதினார். தானியேல் தன் வாழ்வில் ஒரு தெளிவான தார்மீக கோட்டை வரைந்திருந்தார். அதை மீறக்கூடாது என்று தன் வாழ்வில் உறுதியாக இருந்தார். தேவ ஜனமே, உங்கள் வாழ்வில் இப்படிப்பட்ட வரையறைகள் உள்ளதா? வேத வசனத்தை மீறமாட்டேன், கர்த்தருடைய வார்த்தைக்குள் என் வாழ்க்கையை அமைத்து கொள்வேன் என்ற கொள்கை உள்ளதா?

தானியேல் தன் தீர்மானத்தில் உறுதியாயிருப்பதை கண்ட தேவன், பிரதானிகளின் தலைவனுடைய கண்களில் அவருக்கு தயவு கிடைக்கும்படி செய்தார். மேலும் மற்ற மனிதர்களைக் காட்டிலும் பத்து மடங்கு

ஞானத்தையும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார் (தானி.1:9-21). இன்றைய கிறிஸ்தவ உலகில் சத்தியத்திற்காக, வேத உபதேசங்களுக்காக நிற்கிற மக்கள் குறைந்திருக்கிறார்கள். அப்படி நிற்க நமக்கு தானியேலைப் போல துணிவும் உறுதியான தீர்மானமும் அவசியம். தேவன் எதிர்பார்க்கும் தரத்தின்படி வாழ நாம் முடிவு செய்தால் நம்முடைய வாழ்க்கை நிச்சயம் ஜெயமாக இருக்கும்!

## குற்றமற்ற வாழ்க்கை உடைய மனிதன்
## MAN OF PURITY

தானியேலிடமிருந்து நாம் கண்டறியக்கூடிய மற்றொரு வெற்றியின் இரகசியம்– அவர் கர்த்தருக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் உண்மையானவராகவும் குற்றமற்றவராகவும் காணப்பட்டார். மனசாட்சிக்கு களங்கமில்லாத பரிசுத்த ஜீவியம் செய்தார். தானியேல் 6ம் அதிகாரத்திற்கு நாம் வரும்போது அவர் 80 வயதை கடந்த ஒரு முதியவராக இருக்கிறார். தன்னுடைய இளம் வயது முதல் முதிர் வயது வரை தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்தவர் (தானி.9:23; 10:11).

தானியேல் 6ம் அதிகாரத்தில் தரியு ராஜாவினால் தானியேல் உயர்ந்த பதவியில் நியமிக்கப்படுகிறார். இதைக் கண்டு பொறாமையும் எரிச்சலும் கொண்ட ஒரு கூட்டத்தார் அவர்மேல் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க முடியாதா என்று சுற்றி சுற்றி வந்தார்கள். அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் உற்றுநோக்கி குறையை தேடி வந்தனர். ஆனால் தானியேல்மேல் குற்றம் சுமத்துவதற்கு யாதொரு குறைவையும் அவர்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. வேதம் கூறுகிறது, **'தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை'** (தானியேல் 6:4).

தானியேலின் வாழ்க்கை முட்களுக்குள்ளே காணப்படும் லீலி புஷ்பம் போல இருந்தது. காட்டு மரங்களுக்குள்ளே ஒரு கிச்சிலி மரம் போல தானியேலின் வாழ்க்கை இருந்தாலும் கூட, அந்த அந்நிய தேசத்திலே புறஇனத்தார் மத்தியிலே கர்த்தருக்காக உழைக்கவும், வெற்றி சிறக்கவும், மணம் வீசவும் அவர் தவறவில்லை. பலவித பிரச்சனைகளும், போராட்டங்களும் அவரை நெருக்கிய போதிலும், அவர் உண்மையுள்ளவராகவே விளங்கினார்.

சிங்கக் கெபியிலே போடப்பட்ட தானியேலின் சாட்சி என்ன? "ராஜாவே, நீர் என்றும் வாழ்க! சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார். அதேனென்றால், அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன். **ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிக்கேடு செய்ததில்லை"** என்று தானியேல் கூறுவதை வேதத்தில் வாசிக்கிறோம் (தானி.6:21,22). நம்மைக் குறித்து நமது மனசாட்சி கூறுவது என்ன? மற்றவர்கள் கொடுக்கிற சாட்சி என்ன? வீட்டிலுள்ளவர்கள் கொடுக்கும் சாட்சி என்ன? கர்த்தர் கொடுக்கும் சாட்சி என்ன? சிந்தித்துப் பாருங்கள்!

தேவ ஜனமே, கர்த்தர் நம்மிடத்தில் கையின் சுத்தத்தையும், இருதயத்தின் சுத்தத்தையும் எதிர்பார்க்கிறார். பொய்சொல்லி, ஏமாற்றி காரியங்களை செய்கிறவர்கள் சிறப்பதில்லை. காலம் கடந்துசெல்லும்போது படுதோல்வியை சந்திப்பார்கள். ஆனால் பரிசுத்தமும் குற்றமற்ற வாழ்க்கையும் நிச்சயம் ஜெயத்தை கொண்டு வரும்!

## சீரான ஜெபவாழ்க்கை உடைய மனிதன்
## MAN OF PRAYER

தானியேலின் காரியம் ஜெயமாக இருந்ததின் மற்றொரு இரகசியம் அவரது சீரான ஜெப வாழ்க்கையாகும். தானியேலின் கொள்கைகள் அவரை வசனத்தில் நங்கூரமிட்டிருந்தது. அவரது உண்மையும் தூய்மையும் அவரை கறைபடாமல் பாதுகாத்தது. அவரது ஜெப வாழ்க்கை அவரை தாங்கி நின்ற உயிர் நாடியாக இருந்தது. பிரச்சனை, நெருக்கடி நேரங்களில் மட்டும் அவர் ஜெபம் ஏறெடுக்கவில்லை. ஜெபம் என்பது அவருடைய தினசரி பழக்கமாக இருந்தது. பலவிதபொறுப்புகள் மத்தியிலும், தன்னுடைய வயதான நாட்கள் வரை தினம் மூன்று நேரம் ஜெபிக்கும் பழக்கமுடையவராக இருந்தார்.

தானியேல் 6:10 கூறுகிறது, **"தானியேலோவென்றால், அந்த பத்திரத்துக்கு கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும் தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்".**

இந்த வசனத்தின் மூலம் தானியேல் நெருக்கடி வந்தபோது மட்டும் ஜெபிக்கவில்லை. எப்போதும் செய்ததைத் தொடர்ந்து செய்தார். அவரது ஜெப வாழ்க்கை சீரானதாகவும் (மூன்று வேளை), அனைவராலும் அறியப்பட்டதாகவும் இருந்தது. மேலும் அவர் தாழ்மையுள்ளத்தோடும் (முழங்காற்படியிட்டு), நன்றியுணர்வுடனும் எப்பொழுதும் ஜெபம் செய்தார் என்று பார்க்கிறோம். நம்முடைய வாழ்விலும் ஜெபம் அவ்வப்போது செய்யக்கூடிய ஒன்றாக இராதபடி, சீரான, தினசரி வழக்கமாக இருக்க வேண்டும்.

மேலும் தானியேலின் ஜெபங்கள் தனக்காக மட்டுமல்லாமல் பிறருக்கானதாகவும் இருந்தது. தானியேல் 9-ம் அதிகாரத்தில் அவர் யூத ஜனங்களுக்காக பரிந்து பேசுவதையும், தேசத்தின் பாவங்களை அறிக்கையிடுவதையும், தேவனின் இரக்கத்திற்காக மன்றாடுவதையும் நாம் காண்கிறோம். அவருடைய ஜெபங்கள் வேத வசனங்களாலும், மனத் தாழ்மையாலும், கர்த்தருடைய வாக்குத்தத்தங்களில் கொண்ட விசுவாசத்திலும் நிறைந்திருந்தன.

ஆம் பிரியமானவர்களே, ஜெபம் தான் உங்களை ஜெயத்தின் பாதையிலே வீரநடைபோட உதவி செய்யும். ஜெப வாழ்க்கை தானியேலை தேசத்தில் உயர்த்தியது. தன்னுடைய விசுவாசத்திற்காகவும் பரிசுத்தத்திற்காகவும் நிற்க தைரியம் அளித்தது. சிங்கங்களின் வாய்களை அடைத்து போட்டது. தானியேல் கர்த்தரையே சார்ந்து வாழ்ந்தபடியால் கர்த்தர் அவருக்கு அசாதாரண ஞானத்தையும், தீர்க்கதரிசன வெளிப்பாடுகளையும் தந்தருளினார். தேவனோடு அவருக்கு இருந்த ஆழமான உறவு 70 ஆண்டுகளுக்கு மேலாக அவருக்கு தொடர்ந்து ஜெயத்தை கொண்டு வந்தது. அநேகருக்கு அவரை ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக இருக்க செய்தது! பாபிலோனிய மற்றும் பெர்சிய சாம்ராஜ்யத்தின் ராஜாக்களும் தானியேலின் தேவன்தான் உண்மையான தேவன் என்று அறிக்கை செய்ய வைத்தது.

கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மனிதன், தேசங்களையும், ராஜாக்களையும், தலைமுறைகளையும் எப்படி பாதிக்க முடியும் என்பதற்கு தானியேலின் வாழ்க்கை ஒரு பிரகாசமான எடுத்துக்காட்டு! நாமும் தானியேலின் முன்மாதிரியை பின்பற்றுவோம்! கர்த்தரால் வரும் ஜெயத்தை பெற்று ஆசீர்வாதமாக இருப்போம்! ஆமென்.

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.



# மூன்றாவது நபர் குறுக்கீடு

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**
Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary-Tamil District Council of SIAG

**இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதி.2:24).**

திருமண வாழ்வின் ஆசீர்வாதத்திற்கு ஆதாரமாக ஆண்டவராகிய இயேசு இந்த வார்த்தையை கூறியிருக்கிறார். தகப்பனையும், தாயையும் விடுதல் என்றால், கைவிட்டுவிடுதல் என்பது அர்த்தமல்ல. நம்முடைய ஆயுசு நீடித்திருப்பதற்கு பெற்றோர்களை கனம் பண்ணவேண்டும் என்பது வேதம் கொடுத்திருக்கிற வெறும் ஆலோசனை அல்ல, இது கண்டிப்பாக செய்யப்பட வேண்டிய கட்டளைகளில் ஒன்று.

**Reader's Digest** என்ற ஆங்கிலப் பத்திரிக்கை "உங்களுக்கு கிடைக்கும் முக்கிய தகவல்களை முதலாவது யாரிடத்தில் பகிர்ந்து கொள்கிறீர்கள்?" என்ற கேள்வியை மையமாக வைத்து நடத்திய ஆராய்ச்சியில் நெதர்லாந்து தேசத்தில் 49% தங்களது கணவன்/மனைவியினிடத்தில் தெரிவிப்பதாக கூறியுள்ளனர். ஸ்பெயின் தேசத்தில் 46%, ஆப்பிரிக்கா தேசத்தில் 45% இதே கருத்தை வலியுறுத்தி உள்ளனர். முதல் 10 இடங்களை பிடித்த நாடுகளில் இந்தியா இடம் பெறவில்லை. இதற்கான பிரதான காரணம், இந்தியாவில் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் குறுக்கீடுகள் திருமண உறவில் அதிகம்.

**TPT** என்கிற ஆங்கில மொழிபெயர்ப்பில் ...he unselfishly attached to his wife"... என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. தன் மனைவியோடே இசைந்திருப்பான் / தன் கணவனோடே இசைந்திருப்பாள் என்பதற்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு.

இந்த திருமண உறவைக் கட்டியெழுப்ப.

- உறுதியான அர்ப்பணிப்பும் (Strong Commitment).
- வெளிப்படையான தன்மையும் (Transparency).
- உண்மையான அன்பும் (Genuine Love).
- நேர்த்தியான புரிந்துகொள்ளுதலும் (Perfect understanding).
- சுயநலமில்லா இணைப்பும் (Unselfish attachments).
- தடையில்லா தொடர்பும் (Uninterrupted Communication).
- ஆழமான நெருக்கமும் (Deep Intimacy) மிகவும் தேவை.

ஆனால் மூன்றாவது நபர்கள், (பெற்றோர்களோ, உறவினர்களோ, நண்பர்களோ, போதகர்களோ) திருமண உறவில் குறுக்கிடும்போது

- உறவின் தனித்தன்மை பாதிக்கப்படுகிறது (Uniqueness of marriage is affected)
- பழைய கலாச்சாரங்களும், பாரம் பரியங்களும் தொடர்வதற்கான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. (Pressure to follow the old culture & tradition takes place).
- கணவன்/மனைவியின் தனித்து இயங்கும் தன்மை ஏற்படாமல் போகிறது. (The Independency of husband/wife doesn't happen).
- தேவையில்லாத கருத்துக்கள் திணிக்கப்படுகிறது. (Unnecessary opinions are injected).
- உண்மையான பிணைப்பு கணவன்-மனைவிக்கிடையே ஏற்படாமல் போகிறது. (A strong bond between husband & wife is not happening).
- ஒருவரையொருவர்/குறைசொல்வதற்கான வாய்ப்புகள் பெருகுகிறது. (Opportunities to criticise. each other are increasing)
- நம்முடைய குடும்பம் என்கிற உணர்வு ஒரு கணவன்-மனைவிக்கு ஏற்படாமலே போகிறது. (Couple doesn't have the Sense of Belongingness).

இன்றைய குடும்ப பிரச்சனைகளுக்கு, ஒரு பிரதானமான காரணம், பெற்றோர் மற்றும் மற்றவர்களின் தேவையில்லாத குறுக்கீடு என்பது நிதர்சனமான உண்மை. ஆகவே, பெற்றோர்களே திருமணமான உங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையில் தேவையில்லாமல் குறுக்கிடுவதை தயவுசெய்து நிறுத்திக் கொள்ளுங்கள். தேவைப்படும் பொழுதும், அவர்கள் கேட்கும் பொழுதும் உதவிகளோ, ஆலோசனையோ கொடுப்பது தவறில்லை.

அதைப் போல திருமணமான சகோதர சகோதரிகளே, மூன்றாவது நபர்கள், அவர்கள் யாராக இருந்தாலும், தேவையில்லாமல் உங்கள் திருமண உறவில் தலையிட அனுமதிக்காதீர்கள்.

வேதம் எளிமையாகக் கூறும் கருத்துக்களை நாம் அர்ப்பணிப்போடு பின்பற்றும்போது சமாதானமும், சந்தோஷமும், ஆரோக்கியமும், தேவநோக்கம் நிறைவேறுதலும் நம்முடைய வாழ்க்கையில் சிறப்பாக நடைபெறும்.

"Leave your father and mother to be unselfishly attached to your husband/wife and become one flesh as a new family"– The Passion Translation

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# அனுகூலமான வாசல்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவன் நமக்கு வைத்திருக்கும் பலவிதமான அனுகூல வாசல்களைக் குறித்து நாம் வேதத்தில் வாசிக்கிறோம். “கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க, கதவுகளைத் திறந்து வைக்கும்படிக்கு” என்று அவனைப் பெயர் சொல்லி அழைத்த தேவன் சொல்லுகிறார். கர்த்தரால் அபிஷேகம் பெற்று, அவரால் பெயர் சொல்லி அழைக்கப்பட்ட நமக்கும் அவர் திறந்த வாசலை வைத்திருப்பதுமின்றி, நமக்கு முன்னே போய் கோணலானவைகளை செவ்வையாக்குவார். பெயர் சொல்லி அழைத்தவர் அவரே என்று அறியும்படிக்கு வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் நமக்குக் கொடுப்பார். அவர் மாத்திரமே தேவன் (ஏசா.45:1-5). உனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான் என்று வெளி.3:8-ல் ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறார். இவ்விதழில், சுவிசேஷத்திற்கு தேவன் வைத்திருக்கும் அனுகூலமான வாசலைக் குறித்து பார்ப்போம்.

எபேசு பட்டினத்தில் பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது என்று, சுவிசேஷம் அறிவிப்பதற்கான விடுதலையைக் குறித்துப் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (1 கொரி.16:9). பவுல் எப்படி சுவிசேஷத்தை அறிவித்து வந்தார் என்பதை நாம் அறிவோம். அப்படியிருந்தும், அவர் மேன்மைபாராட்ட தனக்கு இடமில்லை என்றும் அது தன்மேல் விழுந்த கடமை என்றும் அப்படி பிரசங்கிக்காவிடில் தனக்கு ஐயோ என்றும் கூறுகிறார் (1கொரி.9:18). சுவிசேஷம் அறிவிப்பது நம் எல்லாருடைய பிரதான கடமையாயிருக்கின்றது. இல்லாவிட்டால் நமக்கு ஐயோ என்ற பரிதாப நிலை தான். ஏனென்றால் கிறிஸ்துவானவர் பரமேறுவதற்கு முன்பாக நமக்குக் கொடுத்த கடைசி (பிரதான) கட்டளை, புறப்பட்டுப்போய் சுவிசேஷம் அறிவிப்பது தான். இதை நாம் சிரமேற்கொண்டு செய்ய வேண்டும். இயேசுவானவர் தம்முடைய சீஷர்களிடம் சொன்ன ஐசுவரியவான் மற்றும் லாசரு என்ற தரித்திரனை பற்றிய சம்பவம் நாமறிந்ததே. இது உவமை அல்ல. ஏனென்றால் இதில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உவமைகளில் பெயர் சொல்லப்படாது. எனவே இது ஒரு நிஜ சம்பவமாக இருக்கலாம். ஐசுவரியவான், பாதாளத்திலிருந்தபோது, தம்முடைய 5 சகோதரர்களும் அங்கு வந்துவிடாதபடி அவர்களுக்கு சாட்சியாக அறிவிக்க லாசருவை அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறான். ஆனால், அந்த

ஜெபம் கூட கேட்கப்படவில்லை. எனவே, மரிப்பதற்கு முன்பாக, இந்த பூமியில் நாம் உயிருடன் இருக்கும்போதே சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். மற்றும் சுவிசேஷத்தை அறிவித்துவிட வேண்டும். ஆகவே, உத்திரவாதத்தை உணர்ந்தவர்களாய், நாம் மிகவும் ஜாக்கிரதையுடன் செயல்பட வேண்டும்.

## அப்போஸ்தலனாகிய பவுல்

அப்போஸ்தலனாகிய பவுல், அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, தன்னைத்தானே அடிமையாக்கினார். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்கிறார். சுவிசேஷத்தில் உடன்பங்காளியாகும்படிக்கே இப்படிச் செய்கிறேன் என்கிறார் (1கொரி.9:19,22,23). கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும், நான் கடனாளியாயிருக்கிறேன். என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் என்கிறார் (ரோமர் 1:14-16). நம்மைச் சுற்றியுள்ள அந்நிய வழிபாட்டு மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க நாம் கடனாளிகளாயிருக்கிறோம். பவுலின் மாதிரியைப் பின்பற்றினால், நாமும் மிகுந்த பலனடைவோம். அதிக ஆத்துமாக்களை சம்பாதித்து பரலோகத்திற்கு கொண்டுபோக முடியும்.

## பிலிப்பு

சவுல், சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தபடியால், சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். அதில் பிலிப்புவும் ஒருவர். இவர் ஒரு அப்போஸ்தலர் அல்ல. சாதாரண பந்திவிசாரணை செய்தவர். இவர் சமாரியாவிற்கு சென்று கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார். அனேக அற்புத அடையாளங்கள் இவர் மூலம் நடைபெற்றது. பிசாசுகள் அலறி ஓடினது, திமிர்வாதக்காரரும், சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். மாயவித்தைகாரனாகிய சீமோனும், அனேக புருஷரும் ஸ்திரீகளும் பிலிப்பு பிரசங்கித்ததை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். எத்தியோப்பிய ராஜஸ்திரீயின் மந்திரி, எருசலேமிலிருந்து திரும்பிப்போகும்போது, தன் ரதத்தில் உட்கார்ந்து ஏசாயா ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர், பிலிப்புவிடம், சரியான திசைகளைச் சொல்லி, வனாந்திரத்தில் அந்த மந்திரி போகிற வழியில், அவனோடு சேர்ந்து கொள்ள சொல்கிறார். பிலிப்பு, அந்த மந்திரிக்கு சுவிசேஷம் அறிவித்து அந்த வனாந்திரத்தில் ஞானஸ்நானமும் கொடுத்தார். அவர்கள் கரையேறினவுடனே, ஆவியானவர், பிலிப்புவை கொண்டுபோய்விட்டார். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு போக்குவரத்து (transportation) பிலிப்புவிற்கு கிடைத்தது (அப்.8). ஒரு சாதாரண பந்தி விசாரிப்புக்காரரால், இத்தனை அதிசயங்களும் அற்புதங்களும் நடந்து, அவர் அறிவித்த வசனத்தை உறுதி செய்தது. நாமும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, சுவிசேஷத்தை அறிவிப்போமானால், ஆவியானவர், அற்புத அடையாளங்கள் மூலம் தம் வசனத்தை உறுதிப்படுத்துவார்.

## சமாரிய ஸ்திரீ

இயேசுவானவர், சமாரிய ஸ்திரீயை சந்தித்ததை யோவான் 4 ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கலாம். சுவிசேஷம் எப்படி அறிவிக்க வேண்டும்

என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். தண்ணீர் எடுக்க வந்த ஸ்திரீயிடம் , தண்ணீரை வைத்தே ஒரு உரையாடலை ஆரம்பிக்கிறார். பின்பு ஜீவத்தண்ணீரைப் பற்றிப் பேசுகிறார். அஞ்ஞான மார்க்கத்தாரிடம் சுவிசேஷம் அறிவிக்கும்போது, இப்படி ஒரு பொதுவான காரியத்தைப் பற்றி பேச்சை ஆரம்பிக்கலாம். பின்பு, அவளின் அவலநிலையைப் பற்றிக் கூறுகிறார். அவள் கண்கள் திறக்கப்படுகிறது. ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்கிறாள். தேவனைத் தொழுது கொள்வதைப்பற்றி அவளிடம் ஆண்டவர் பேசுகிறார். பின்பு அவள், ஊருக்குள்ளே போய், நான் செய்த எல்லாவற்றையும் ஒருவர் எனக்குச் சொன்னார். "அவரை வந்து பாருங்கள்", அவர் கிறிஸ்துதானோ என்றாள். நமக்கு, கிறிஸ்துவைப்பற்றி நன்கு எடுத்துரைக்கத் தெரியாவிட்டாலும், வீட்டுக் கூட்டங்களுக்கும், சபைக்கும் வந்து பாருங்கள் என்று மக்களை அழைத்து வரலாம். ஆண்டவர் அவர்களை சந்திப்பார். அழிவிற்கு நேராக போகிற மக்களை, எப்படியாகிலும் கிறிஸ்துவண்டை வழிநடத்துவதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். 25 ஆம் வசனத்தில், மேசியா வருவதைக் குறித்துப் பேசுகிறாள். பிற்காலத்தில், அவள் மிகச்சிறந்த ஊழியக்காரியாக விளங்கினாள் என்றும் நீரோ அரசனின் மகள் உட்பட அநேகரை ஆண்டவரிடம் வழி நடத்தி ஞானஸ்நானம் கொடுத்தாள் என்றும் சரித்திரம் கூறுகிறது. நாமும், இயேசு கிறிஸ்துவைப் போல சுவிசேஷம் அறிவிப்போமானால், சமாரிய ஸ்திரீயை போன்ற பல சீஷிகளை எழுப்ப முடியும். சமாரிய ஸ்திரீயைப் போல நல்ல சுவிசேஷகர்களாய் முழு கிராமத்தையும் கிறிஸ்துவிற்குள் கொண்டுவர முடியும்.

## பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா

கணவன், மனைவியாகிய இவர்கள் இருவரும், அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உடன் வேலையாட்களாய் இருந்தது மட்டுமல்லாமல், சபை கூடி வரும்படி தங்கள் வீட்டையும் திறந்து கொடுத்தார்கள். சுவிசேஷம் அறிவிப்பது மட்டும் நம் கடமை என்றில்லாமல், சிறு குழுக்கள் நடத்த நம் வீட்டைத் திறந்து கொடுக்கும்போது திரளான மக்களுக்கு ஆசீர்வாதமாக இருப்போம். ஒரு கலசம் தண்ணீருக்கும், பிரதிபலன் கொடுக்கும் தேவன், நம்முடைய பிரயாசங்களுக்குத் தக்க பலனளிப்பார்.

கர்த்தருடைய வருகை மிகத்துரிதமாக இருப்பதால், அவருடைய பிரதான கட்டளையாகிய சுவிஷேமறிவித்தலை அவசரகால வேலையாக கருதி செயல்படுவோம். நித்தியத்திற்குள் நாம் செல்லும்போது என்ன சாதித்தோம், எவ்வளவு சேமித்து வைத்திருக்கிறோம் என்பதெல்லாம் கணக்கில் வராது. அவைகள் அழிந்து போகக்கூடியவைகளாக இருப்பதால், இங்கேயே நின்று விடும். ஆத்துமாக்கள் மட்டுமே, அழியாதவைகள். அவர்களை மட்டுமே நாம் நித்தியத்திற்குள் கொண்டு செல்ல முடியும். நமது பரலோக தகப்பனை, ஆத்தும மணவாளனை சந்திக்கச் செல்லும்போது, ஒரு ஆத்துமாகூட கொண்டு போகாமல், வெறுங்கையோடு, வெட்கத்தோடு அவரை சந்திக்கப் போகிறோமா? சிந்தித்து செயல்படுவோம். கொஞ்ச காலம் மட்டுமே உண்டென்று அறிந்த சாத்தான், மிக கடுமையாக வேலை செய்து ஆத்துமாக்களை சீரழித்துக் கொண்டிருக்கிறான். சபையாக நாம், விழிப்புள்ளவர்களாய், விரைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது. நம் மாநிலத்தில் அனுகூலமான வாசல் இருக்கும்போதே, நம் கடமையை செய்து முடிக்க தேவன் உங்களை ஏவி எழுப்பி, கிருபை கொடுப்பாராக!

# தேவனுடைய நாமங்கள் மூலம் அவரை அறிந்துகொள்ளுங்கள்

| | | |
|---|---|---|
| யேகோவா ஏலோகீம் | ஆதி. 2:4 | சிருஷ்டி கர்த்தர் |
| யோகோவா ஏல் எலியோன் | ஆதி.14:22 | உன்னதமான தேவனாகிய கர்த்தர் |
| யோகோவா அடோனாய் | ஆதி.15:2 | கர்த்தராகிய ஆண்டவர் |
| யோகோவா ஏல் ஓலாம் | ஆதி.21:33 | சதாகாலமுள்ள தேவனாகிய கர்த்தர் |
| யோகோவா யீரே | ஆதி.22:14 | தேவைகளை சந்திக்கும் கர்த்தர் |
| யோகோவா ராஃபா | யாத்.15:26 | பரிகாரியாகிய கர்த்தர் |
| யோகோவா நிசி | யாத்.17:15 | வெற்றிதரும் கர்த்தர் |
| யோகோவா மெக்காதேஷ் | யாத்.31:13 | பரிசுத்தமாக்கும் கர்த்தர் |
| யோகோவா ஷாலோம் | நியா.6:24 | சமாதான கர்த்தர் |
| யோகோவா ஷாபாத் | நியா.11:27 | நியாயம் செய்யும் கர்த்தர் |
| யோகோவா சபயோத் | 1 சாமு.1:13 | சேனைகளின் கர்த்தர் |
| யோகோவா சிட்கேணு | எரே. 23:6 | நீதியுள்ள கர்த்தர் |
| யோகோவா ரூபா | சங்.23:1 | மேய்ப்பராகிய கர்த்தர் |
| யோகோவா ஓசேனு | சங்.95:6 | உண்டாக்கின கர்த்தர் |
| யோகோவா கிப்போர் | ஏசா. 42:13 | பராக்கிரமமுள்ள கர்த்தர் |
| யோகோவா ஷம்மா | எசே.48:13 | இருக்கும் கர்த்தர் |
| ஏல் ஓலாம் | ஆதி.21:33 | சதாகாலமுள்ள தேவன் |
| ஏல் டிப்பில்லா | சங். 66:20 | ஜெபம் கேட்கும் தேவன் |
| ஏல் ரோயீ | ஆதி. 16:13 | காண்கின்ற தேவன் |
| ஏல் ஆமென் | ஏசா. 65:16 | சத்திய தேவன் |
| ஏல் நாசா | சங். 99:8 | மன்னிக்கும் தேவன் |
| ஏல் காரோப் | எரே. 23:23 | சமீபமான தேவன் |
| ஏல் ஷடாய் | ஆதி. 17:1 | சர்வ வல்லமையுள்ள தேவன் |
| எபினேசர் | 1 சாமு.7:12 | இம்மட்டும் உதவின தேவன் |
| இம்மானுவேல் | மத். 1:23 | தேவன் நம்மோடிருக்கிறார் |



# யோவேல்: JOEL

## புத்தக அறிமுகம்


**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University,
Asst.Superintendent, Tamilnadu A.G


ஓசியா முதல் மல்கியா வரையுள்ள 12 புத்தகங்கள் சிறிய தீர்க்கதரிசனப் புத்தகங்கள் என அறியப்படுகின்றன. இவை அளவில் சிறியப் புத்தகங்களாய்க் காணப்படுவதால் இப்பெயர் பெற்றன. இவற்றில் இரண்டாவது புத்தகமாக **'யோவேல்'** நமது வேதாகமத்தில் தரப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் 3:28-32 வசனங்களை அப்போஸ்தலர் 2:16ல் பேதுரு மேற்கோள்காட்டிப் பேசுகிறான்.

### புத்தக ஆசிரியர் (Author of the Book)

இப்புத்தகத்தின் ஆசிரியர் யோவேல். இவன் தெற்கு ராஜ்யமாகிய யூதாவைச் சேர்ந்தவன். இவனது தகப்பன் பெயர் பெத்துவேல் (1:1). யோவேல் தெற்கு ராஜ்யத்திற்கு தீர்க்கதரிசனம் உரைத்தான். இந்நாட்களில் தெற்கு ராஜ்யத்தில் யோவாஸ் தனது ஏழாவது வயதில் அரசனாக்கப்பட்டான். அது, அத்தாலியாள் அராஜக ஆட்சி ஒழிக்கப்பட்ட காலம். யோய்தா என்னும் ஆசாரியன் பாலகனாகிய யோவாசுக்குத் துணை நின்றான். நாற்பது வருடங்கள் ஆட்சியிலிருந்த யோவாஸ், ஆசாரியனாகிய யோய்தாவின் ஆலோசனைப்படி நடந்த நாட்களிளெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்,(2இரா.12:2). வடக்கு இராஜ்யமாகிய இஸ்ரவேல் தேசத்தில் ஓசியா, ஆமோஸ் என்ற தீர்க்கதரிசிகளும், தெற்கு இராஜ்யத்தில் மீகா மற்றும் ஏசாயா ஆகியோரும் தீர்க்கதரிசனம் உரைத்த அதே காலத்தில் (கிமு 8ம் நூற்றாண்டு:800-700BC) யோவேலும் தெற்கு ராஜ்யத்தில் தீர்க்கதரிசனம் உரைத்திருக்க வேண்டும் என நம்ப இடம் உண்டு.

### புத்தகம் எழுதப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலை: (Occasion of the Book)

யூதா தேசத்தில் பெரிய வெட்டுக்கிளிகளின் படையொன்று எழும்பி வந்து விளைச்சல்களையும், பயிர்வகைகளையும் தின்று தீர்த்துவிட்டது. பச்சைப்புழு, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி, முசுக்கட்டைப்பூச்சி என நான்குவிதமான வெட்டுக்கிளிகள் எழும்பி வந்தன (1:4). அவைகள் கனிகளையும், காய்களையும், பிஞ்சுகளையும், பூக்களையும், மொட்டுகளையும் தின்று தீர்த்துவிட்டன. பலன்தரும் செடிகள், கொடிகள் மற்றும் மரங்களின் இலைகளையும், தோல்களையும், கிளைகளையும், தண்டுகளையும்கூட தங்களுடைய ராட்சஷப் பற்களால் வெட்டித் தின்று நாசம் செய்துவிட்டன. இப்பொழுது எஞ்சியதெல்லாம் தீர்த்து அழிக்கப்பட்டப் பயிர்களின் மொட்டைத் தாளடிகளும், பலன்தரும் விருட்சங்களின் தோலுரிக்கப்பட்ட செடி, கொடி, மரங்களுமே!

இதனால் தேசத்தில் பெரும் வறட்சியும் பஞ்சமும் வந்தது. யோவேல் ஒன்றாம் அதிகாரத்தில் இந்த அழிவைப்பற்றி விபரமாக வாசிக்கிறபோது (1:9-20), திராட்சைசெடி அழிக்கப்பட்டது, அத்திமரம் உரிக்கப்பட்டது, அதன்பட்டைகள் தின்று தீர்க்கப்பட்டது, அதன் கிளைகளும் வெண்மையாயிற்று.

கர்த்தருடைய ஆலயத்தில் செலுத்தப்படவேண்டிய போஜனபலிக்குரிய தானியமும், பானபலிக்குரிய பழரசங்களும் முற்றிலும் இல்லாமற்போயிற்று.

வயல்வெளி பாழாகி விளைச்சலெல்லாம் அழிக்கப்பட்டது. எண்ணெய் இல்லாமற்போயிற்று. வயல்வெளியின் அறுப்பு அழிந்துபோயிற்று. முதல் விளைச்சலில் முன்பசி ஆற்றப்பயன்படும் தரம் குறைந்த வாற்கோதுமையும், பின்விளைச்சலில் வரும் முதல்தரமான கோதுமையும் இல்லாமற்போயிற்று. மாதுளை, பேரிச்சம், கிச்சிலி (ஆப்பிள்மரம்) முதலிய வெளியின் செடிகளெல்லாம் வாடிப்போயின.

தேவனுடைய ஆலயத்தில் பலிசெலுத்தத் தேவையான போஜனமும், பானமும் இல்லை. ஆகாரமும், குடிக்க பானங்களும் இல்லாமற்போயிற்று. பயிர்களுக்கும் விளைநிலங்களுக்கும் நேர்ந்த இப்பேரிடர் சமுதாயத்தின் எல்லா எல்லைகளையும் பாதித்தது.

இப்படிப்பட்ட அழிவைக் கண்ட தலைவர்களும், ஆசாரியர்களும் ஜனங்களைக்கூட்டி, பரிசுத்த உபவாசத்தை அறிவித்து இன்னும் வரவிருக்கும் பேரழிவுக்குத் தப்பித்துக்கொள்ளும்படி யோவேல் ஆலோசனை சொல்லுகிறான்.

## புத்தகம் எழுதப்பட்ட நோக்கம்:

- கர்த்தருக்கு முன்பாகப் பரிசுத்த சபையாகக்கூடி உபவாசிக்க அழைப்புக் கொடுக்கும்படி எழுதப்பட்டது, (1:14; 2:15-16).
- ஜனங்கள் மனந்திரும்பிக் கர்த்தரைத் தேட வேண்டும். தங்களைத் தாழ்த்தி உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும், தேவனுடைய இரக்கம் கிடைப்பதற்காக மன்றாடி ஜெபிப்பதற்கும் அழைப்புக் கொடுக்கும்படி எழுதப்பட்டது.
- மனந்திரும்பி கர்த்தரிடம் வந்த மக்களுக்கு உயிர்மீட்சி தந்து மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்களைத் தருவேன் என ஆண்டவர் தீர்க்கதரிசனமாய் வாக்குப்பண்ணிய விபரங்களைத் தெரிவிப்பதற்காகவும் இப்புத்தகம் எழுதப்பட்டது.

## புத்தகத்தின் மூன்று முக்கியப் பிரிவுகள்:

1. வெட்டுக்கிளிகளால் மிகப்பெரிய அழிவு தேசத்தில் வந்தது. அதனைக் காரணங்காட்டி முழுதேசமும் உபவாசத்துக்கும், மனந்திரும்புதலுக்கும் தேவனை உண்மையாய்த் தேடுவதற்கும் தீர்க்கதரிசியாகிய யோவேல் அழைப்புக்கொடுத்தான் (அதி 1.).
2. வடக்கேயிருந்து இன்னும் தேவனுடைய மிகப்பெரிய நியாயத்தீர்ப்பு எழும்பி வரவிருந்தது. அது இன்னொரு கொடிய வெட்டுக்கிளிகளால் வரும் அழிவாக இருக்கலாம் அல்லது அந்நிய படைகள் இந்த தேசத்துக்கு எதிராக எழும்பி வரலாம் (2:1-18). இவர்கள் சீரியர் அல்லது ஆசீரியர் அல்லது பாபிலோனியராகவும் இருக்கலாம்.
3. ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி மனந்திரும்பினால் காத்தர் இரக்கம் காட்டுவார். இதனால் மக்களுக்கு உயிர்மீட்சியும் மறுசீரமைப்பும் தருவார். அத்துடன் மாம்சமான யாவர்மேலும் பரிசுத்த ஆவியைப் பொழிந்தருளுவார். பெந்தெகொஸ்தே நாளில் ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் பொழிவு இங்கு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டுள்ளது.

அத்துடன் கடைசிகாலத்தில் தேவன்தரும் இரட்சிப்பும் மிகப்பெரிய நியாயத்தீர்ப்பும் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டுள்ளது, (2:18-3:21).

**யோவேலின் சிறப்புத் தீர்க்கதரிசனச் செய்திகள்:**

- மிகத்தெளிவான பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் ஊற்றப்படுதல் இப்புத்தகத்தில் தரப்பட்டுள்ளது.
- யூதா தேசத்தில் வந்தப் பேரழிவு, ஏராளம் அழிவுகளைப்பற்றிக் கூறுகிறது: வெட்டுக்கிளிகளால் வந்த பேரழிவு, மழைத்தாழ்ச்சி, பஞ்சம், அந்நிய படையெடுப்புகள் மற்றும் இயற்கை பேரழிவுகள். இவை அனைத்தும் ஜனங்களுடைய ஆன்மீகச் சீரழிவுகளுக்கும், ஒழுக்கச் சீர்கேடுகளுக்கும் கர்த்தரால் அனுப்பப்பட்ட நியாயத்தீர்ப்புகள் ஆகும்.
- பல சமயங்களில் மனந்திரும்புதலையும், எழுப்புதலையும், மீட்பையும் இவ்வித பேரளிவுகள் மக்கள் மத்தியில் கொண்டு வந்தன.

**யோவேல் புத்தகத்தின் கருப்பொருள் வசனம்:**

**'ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களை கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்' (யோவேல் 2:12,13).**

**புத்தகத்தின் பொருளடக்கம்:**

**I. யூதாவின்மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருதல், (1,2 அதிகாரங்கள்)**

1. கர்த்தர் வெட்டுக்கிளிகளின் கூட்டத்தை யூத தேசத்தின்மேல் அனுப்புதல், (1:1-2:11).
2. யூதாவை மனந்திரும்பும்படி கர்த்தர் அழைத்தல், (2:12-17).
3. வெட்டுக்கிளிகளின் அழிவினின்று யூதாவை விடுவிப்பேன்' என்ற கர்த்தரின் வாக்குத்தத்தம், (2:18-27).

**II. புறஜாதிய தேசங்களை நியாயந்தீர்த்தல், (2:28-3:21)**

1. மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்' என்ற கர்த்தரின் வாக்குத்தத்தம், (2:28-29).
2. 'கர்த்தருடைய நாள்' வருமுன்னே ஜனங்கள் இரட்சிக்கப்பட வாய்ப்பளிக்கப்படுதல், (2:30-32).
3. யூதாவினிமித்தம் புறஜாதிய தேசங்களைக் கர்த்தர் நியாயந்தீர்த்தல்.

**யோவேல் புத்தகத்தில் 'கர்த்தருடைய நாள்' என்ற இறையியல் கருத்தின் விளக்கம்:**

'கர்த்தருடைய நாள்' என்ற சொற்றொடர் யோவேல் புத்தகத்தில் மிகவும் முக்கியமானதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது, (2:11):

"...கர்த்தருடைய நாள் பெரிதும் பயங்கரமுமாயிருக்கும்; அதை சகிக்கிறவன் யார்?

**நான்கு நிலைகளில் இதை விளங்கிக்கொள்ளலாம்:**

1. ஜனங்களின் பாவங்களினிமித்தம் வெட்டுக்கிளிகளால் விளைச்சல்கள் அழிக்கப்பட்டது. மழை பெய்யவில்லை; இதனால் மிகப்பெரிய வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டது. இதனை யோவேல் "கர்த்தருடைய நாள்" என்று குறிப்பிடுகிறான். கர்த்தரின் தலையீடு அல்லது குறுக்கீடு என்று கூட இதனை அழைக்கலாம்.
2. மேற்கண்ட அழிவுகளையும் மிகப்பெரிய இழப்புகளையும் கண்டும் ஜனங்கள் மனந்திரும்பாவிட்டால் யுத்தம் வரும். அன்று அறியப்பட்ட வல்லரசுகளாகிய ஆசீரியா மற்றும் பாபிலோனியர் யூதா தேசத்துக்கு விரோதமாக எழும்பி வருவார்கள். இந்த யுத்தங்களைக் "கர்த்தருடைய நாள்" என்று யோவேல் அறிவிக்கிறான்.
3. யுத்தத்துக்கு அஞ்சி ஜனங்கள் கர்த்தரிடம் மனந்திரும்பிவராவிட்டால் கர்த்தரின் பெரிதும் பயங்கரமுமான நியாயத்தீர்ப்பு வரும். இதுவும் "கர்த்தருடைய நாள்" என்று யோவேல் அறிவிக்கிறான். இதனைக் கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் எனக் குறிப்பிடுகிறான், (2:31).
4. அதேநேரம், பெந்தெகொஸ்தே நாளில் அபரிமிதமாய் ஊற்றப்படப்போகிற அப்போஸ்தலர் 2ம்அதிகாரத்திலுள்ள நிகழ்வுகளை சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய அகக்கண்களில் கண்ட யோவேல் அதுவும் ஆசீர்வாதமான "கர்த்தருடைய நாள்" என்றும் குறிப்பிடுகிறான்.

**யோவேல் 2:28,29ன் விளக்கம்:**

யோவேல் புத்தகத்தை அறிமுகப்படுத்தும்போது யோவேல் 2:28,29 வசனங்களை சற்று விபரமாகக் கூறாமல் இருக்கமுடியாது.

**"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.**

**"ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்".**

இயேசுகிறிஸ்து உலகத்திற்கு வந்து தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றினார். சிலுவைப்பாடுகளுக்குப் பின்பு அவர் மரித்து அடக்கம்பண்ணப் பட்டு பரலோகத்திற்கு ஏறிப்போனார். அதன்பின்பு பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். இந்நாட்கள் வரை பரிசுத்த ஆவியானவரின் முழு வல்லமை தேவ மக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. எனினும் அவரைக் குறித்த பல பகுதிகளும் அவரது கிரியைகளைக் குறித்த சம்பவங்களும் பழைய ஏற்பாட்டில் ஏராளம் உள்ளன.

- படைப்பின்போது ஆவியானவருக்கு மிக முக்கியப் பங்கு இருந்தது (ஆதி 1,2).
- தேவ மக்களுக்கு தேவனுடைய செய்தியைப் பகிர்ந்தளிப்பதிலும் ஆவியானவர் தீவிரமாய் கிரியை நடப்பித்தார்.
- தேவ ஜனங்களின் தலைவர்கள் கர்த்தருடைய ஆவியானவரால் பெலப்படுத்தப்பட்டதாக பழைய ஏற்பாடு கூறுகிறது. மோசே, கிதியோன், தாவீது, செருபாபேல் ஆகியோர்மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து மிகப்பெரிய காரியங்களைச் செய்தார்.

- குறிப்பிட்ட ஊழியங்களுக்கென ஆவியானவர் இன்னும் சிலரை தகுதிப்படுத்தினார். யோசேப்பு, பெசலயேல், அகோலியாப் ஆகியோர் அவரவருடைய ஸ்தானத்தில் சிறப்பு சேவைகளை செய்ய ஆவியானவரால் பயன்படுத்தப்பட்டனர். ஆவியானவர் தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஒத்னியேல், சிம்சோன், யெப்தா போன்ற நியாயாதிபதிகளை தமது ஆவியினால் நிரப்பி தாம் விரும்பின செயல்களை செய்து முடித்தார்.
- இந்த ஆவியானவர் நீதியின் வழிகளில் மனிதரை திருத்தி நடத்தினார்.
- பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஒரு சிலரை மட்டும் பரிசுத்த ஆவியானவர் தமது சேவைக்கு என்று தீர்க்கதரிசனம் சொல்லவும் பயன்படுத்தினார். எனினும் பொதுவாக அனைவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படவில்லை. பெந்தெகொஸ்தே நாள்வரை இந்த ஆவியானவரின் பெருமளவில் ஊற்றப்படுதல் ஆரம்பமாகவில்லை.
- பரிசுத்த ஆவியானவரின் முழு வல்லமை குறித்த வாக்குத்தத்தம் புதிய ஏற்பாட்டில்தான் நிறைவேறிற்று.
- எல்லா தேவ மக்களின் மேலும் இந்த ஆவியானவர் ஊற்றப்படப்போகும் காலத்தையும் பழைய ஏற்பாடு எதிர்நோக்கியது. பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு இதனை மேற்கோள் காட்டினான் (அப்.2:17,18; யோவேல் 2:28.29). இதே செய்தியினை ஏசாயா 32:15-17; 44:3-5; 59:20-21; எசே.11:19,20; 36:26,27; 37:14; 39:29 என்ற பகுதிகளிலும் காண்கிறோம்.

நமது ஆண்டவருடைய ஜீவனும் வல்லமையும் அவரது ஆவியானவர் மூலம் நம்மீது வரும்போது நாம் தீர்க்கதரிசனம் சொல்லவும், தரிசனங்களைக் காணவும், தீர்க்கதரிசன சொப்பனங்களைக் காணவும், கீழ்ப்படிதலின் வாழ்வு வாழவும், பரிசுத்தம், நீதி, சாட்சியுடன் வல்லமையுடன் வாழவும் நாம் வழிநடத்தப்படுவோமென தேவன் வாக்களித்தார்.

எனவே மேசியாவின் காலத்தில்தான் பரிசுத்த ஆவியானவர் முழுவதுமாக தேவ மக்கள்மேல் வருவார் என பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்து தீர்க்கதரிசனம் உரைத்தனர். பெந்தெகொஸ்தே நாளன்று இது இறுதியாக சம்பவித்தது. இதன்மூலம் பெரிய இரட்சிப்பின் அறுவடை நடந்தது என்பதை நாம் அறிவோம்.

அழிவின் செய்தியுடன் யோவேலின் புத்தகம் ஆரம்பித்தாலும், பரிசுத்தாவியானவரின் அருள்மாரி ஊற்றப்படும் வாக்குத்தத்த செய்தியுடன் முடிகிறது. இந்த பரிசுத்த ஆவியானவரின் நிறைவில் நம்மை அபிஷேகித்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! அதன் வெளிப்படையான ஆரம்ப அனுபவமாகிய அந்நியபாஷை அனுபவத்துக்காகவும் ஸ்தோத்திரம்!

நமது குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லட்டும்; மூப்பரும் சொப்பனங்களைக் காணும் காலங்கள் தொடரட்டும். வாலிபர்கள் தரிசனங்களைக்கண்டுக் கர்த்தருக்காக மாபெரும் காரியங்களைச் சாதிக்கட்டும்.

இந்தப் பரிசுத்த ஆவியானவர் இன்று நம்மேல் இன்னும் நிறைவாய் ஊற்றப்படுவராக! கர்த்தருக்காய் அரியபெரிய காரியங்களைச் செய்ய நாம் பெலப்படுத்தப்படுவோம்.



ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# வேலை என்பது சாபமா? ஆசீர்வாதமா?

இன்று உலகத்தில் 55 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் தங்கள் வேலையில் திருப்தி அடையவில்லை என்று ஒரு ஆய்வு கூறுகிறது. பல கிறிஸ்தவர்கள்கூட வேலை என்பது ஆதாமின் மீறுதலால் வந்த சாபம் என்று எண்ணுகிறார்கள். எனவே, வேலையைக் குறித்த வேதத்தின் கண்ணோட்டம் என்ன எனப் பார்ப்போம்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதி.2:15). ஆனால் மனிதனின் விழுகை வேலையைக் கடினமானதாக மாற்றிவிட்டது (ஆதி.3:17). நம் வேலையில் இயேசுவே நம் முதலாளி என்றும் அவர் கண்கள் நம்மை கவனித்துக்கொண்டு இருக்கின்றன என்பதையும் அறிந்து உண்மையாய் வேலை செய்ய வேண்டும். நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள் (கொலொ 3:23,24).

நாம் செய்யும் வேலை நமக்கு ஆசீர்வாதமாக மாற முதலாவது, முன்னேற வேண்டும் என்ற வாஞ்சையோடு முழு பெலத்தோடு உழைக்க வேண்டும். "நீங்கள் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள் (கொலோ.3:22; எபே 6:9) என்று வேதத்தில் நாம் பார்க்கிறோம். அதன்படி அதிகாரிகள் பார்க்கும்போது மட்டுமல்ல பார்க்காத போதும் வேலையை உண்மையாக செய்யுங்கள். வேலையில் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருங்கள். வேலைக்கேற்ற திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். பூமிக்குரிய முதலாளியைக் கனம் பண்ணுங்கள். 1 பேதுரு 2:18-ல் வேலைக்காரரே அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள் என்றிருக்கிறதே.

செய்யும் வேலையைக் குறித்து வெட்கப்படாதீர்கள். வேலையில்லாமல் கஷ்டப்பட்டுபவர்களை நினைத்துப்பாருங்கள். கர்த்தர் தந்த வேலைக்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். வேலை செய்யும் இடங்களில் பொருட்களைத் திருடாதீர்கள். வேதத்தில், தங்கள் எஜமான்களுக்குக் கீழ்பபடிந்திருந்து எதிர்த்துப்பேசாமல் எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ளவும், திருடாமலிருந்து, சகலத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திச்சொல்லு (தீத்து 2:10; லேவி.19:11) என்றிருக்கிறதே.

நம்மைப் போஷிக்கவும், நமக்குள் தெய்வீக பண்புகளை வளர்க்கவுமே தேவன் வேலையைத் தந்துள்ளார். மற்றவர்களுடைய வேலையோடு ஒப்பிடாதீர்கள். உண்மையாக உழைத்து வேலையில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். ஏனெனில் நாம் நமக்காக அல்ல நம் எஜமானர் கிறிஸ்துவுக்காக சாட்சியாக வாழ்வோமாக...

Rev.சாமுவேல் ஜெபராஜ்



# இதை நினைத்து புருஷனாயிருங்கள்

(பகுதி 2)

## Remember this, and Show yourselves MEN

**Rev.R.தாசையா**

தேனி மண்டல தலைமைப் போதகர்

தேவனுடைய தனித்துவமான குணாதிசயங்களையும், பயங்கரமான செயல்களையும் நினைத்துப் பார்த்து தைரிய நெஞ்சுள்ளவர்களாய் இருக்கும் புருஷர்களை கர்த்தரின் கண்கள் தேடுகிறது.

### தேவ மனிதர்களின் தனித்துவமான வாழ்க்கையை நினையுங்கள்:

### Remember the Distinctive life traits of Godly men:

எலியாவின் காலத்தில் விக்கிரக வல்லமை பெருகினது, தானியேலின் நண்பர்கள் காலத்தில் விக்கிரக வல்லமை மேலோங்கியிருந்தது. ஆனாலும் அவர்கள் சோர்ந்துபோகவில்லை. ஒன்றுக்கும் பின்னிடையாததுமாகிய சிங்கம், போர்க்குதிரை, வெள்ளாட்டு கடா, ஒருவரும் எதிர்க்கக்கூடாத இராஜாவைபோல (நீதி.30:30,31) மனஉறுதியுடன் சாத்தானின் சேனையை மேற்கொள்ளும் புருஷர்களாயிருந்தார்கள். காத்தின் புத்திரர் பரிசையும் ஈட்டியும் பிடித்தவர்களாய், சிங்க முகமும், வெளிமான் வேகமும் கொண்டவர்களாக இருந்தார்கள் (1 நாளா.12:8). அந்நிய தேவனை கண்டோ, அவர்களின் களியாட்டுகள், கொண்டாட்டங்களை கண்டோ பயப்படக்கூடாது, சோர்ந்தும் போகக்கூடாது. நமது இயேசு சீக்கிரத்தில் வீதிகளில், வீடுகளில் உலாவி வருகிறதை கண்களால் பார்ப்பீர்கள், காதுகளால் கேட்பீர்கள் (மத்தேயு 21:10,11).

யோபுவை தேவன் புருஷனைப் போல் இடைகட்டிகொள் (யோபு 40:7) என்று சொல்கிறார். எந்த தேவ மனிதர்களுக்கும் தேவனுக்கு எதிரான காரியங்கள் தேசத்தில் நடக்கும்போது நமது இடைகச்சை தளரும். எலியாவுக்கும் இந்த திடனற்ற மனம் வந்தது (1 இராஜா.19:10) தேவன் எலியாவை புருஷனை போல இடைகட்டி வெளியே கொண்டுவந்து நிறுத்தினார். எலியா தொடர்ந்து கர்த்தருக்காக இன்னும் வைராக்கியமாக செயல்பட்டான்.

**ஒரு கிறிஸ்தவ புருஷருக்கு அரசியல் ரீதியாக, மதரீதியாக, ஆன்மீக ரீதியாக, கொள்கை ரீதியாக என்ன மிரட்டல்கள், பயமுறுத்தல்கள், பாதகச் செயல்கள் வந்தாலும் நெகேமியாவை போல என்னை போன்ற மனிதன் இதைக் கண்டு ஓடுவானோ என்ற தைரியத்துடன் இருக்க வேண்டும்.** (மெகதாபெயேலின் குமாரனாகிய தெலாயாவின் மகன் செமாயா தன் வீட்டிலே அடைக்கப்பட்டிருக்கும்போது, நான் அவனிடத்தில் போனேன்; அப்பொழுது அவன்: நாம் இருவருமாய் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளே போய், தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும்; உம்மைக் கொன்றுபோட வருவார்கள், இரவிலே உம்மைக் கொன்றுபோட வருவார்கள் என்றான். அதற்கு நான்: என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை என்றேன் (நெகே.6:10,11).

பவுல் அத்தேனே பட்டணத்தில் சுற்றி நடந்து விக்கிரகங்களைக் கண்டபோது ஆவியில் வைராக்கியத்துடன் கடிந்து கொண்டு ஊழியத்தை தீவிரமாய் செய்ததினால் சிலர் மாற்றமடைந்தார்கள். அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காக காத்துக்கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, ஜெபஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷனை பண்ணினான். சிலர் அவனைப் பற்றிக்கொண்டு, விசுவாசிகளானார்கள். அவர்களில் மார்ஸ் மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியோனீசியு என்பவனும், தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும், இவர்களுடனே வேறு சிலரும் இருந்தார்கள் (அப்.17:16,17,34). எனவே **விக்கிரக கிரியைகளை காணும்போதெல்லாம் தேவனுக்காக இன்னும் வைராக்கியமாக ஊழியம் செய்யுங்கள். சிலர் இயேசுவையும் உங்களையும் பற்றிக்கொண்டு விசுவாசிகளாவார்கள்.**

**விக்கிரகத்தின் வல்லமைகள் தேசத்தில் பெருகும்போது திடமனதுடன் ஜெபிக்கும் புருஷராய் இருங்கள்.** தேவ ஆலயத்துக்கு விரோதமாய் சத்துருக்கள் எழும்பும் போது சங்கீதக்காரன் சங்கீதம் 74:2;9:23-ன் படி நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த உமது சபையையும், நீர் மீட்டுக்கொண்ட உமது சுதந்தரமான கோத்திரத்தையும், நீர் வாசமாயிருந்த சீயோன் பர்வதத்தையும் நினைத்தருளும். நெடுங்காலமாகப் பாழாய்க்கிடக்கிற ஸ்தலங்களில் உம்முடைய பாதங்களை எழுந்தருளப்பண்ணும்; பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப் போட்டான்.

உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களுக்குள்ளே கெர்ச்சித்து, தங்கள் கொடிகளை அடையாளங்களாக நாட்டுகிறார்கள். கோடரிகளை ஓங்கிச் சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் பேர்பெற்றவனானான். இப்பொழுதோ அவர்கள் அதின் சித்திரவேலைகள் முழுவதையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப் போடுகிறார்கள். உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்கி, உமது நாமத்தின் வாசஸ்தலத்தைத் தரைமட்டும் இடித்து, அசுத்தப்படுத்தினார்கள். அவர்களை ஏகமாய் நிர்த்தூளியாக்குவோம் என்று தங்கள் இருதயத்தில் சொல்லி, தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துப் போட்டார்கள்.

எங்களுக்கு இருந்த அடையாளங்களைக் காணோம்; தீர்க்கதரிசியும் இல்லை; இது எதுவரைக்கும் என்று அறிகிறவனும் எங்களிடத்தில் இல்லை. உம்முடைய சத்துருக்களின் ஆரவாரத்தை மறவாதேயும்; உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் அமளி எப்பொழுதும் அதிகரிக்கிறது என்று ஜெபிக்கிறதைக் காணலாம். **மனஉறுதியுடன் ஜெபிக்கும் புருஷனாயிருந்து பாருங்கள். அந்நிய வல்லமை அழியும், ஆண்டவரின் வல்லமை வெளிப்படும்.**

விக்கிரக வல்லமை அதிகரித்து, திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு அரசன் முதல் குடிமக்கள் வரை புசித்து, குடித்து, வெறித்து வீரவசனம் பேசிக்கொண்டு இருப்பவர்களை கண்டு தனித்து நிற்கிறோமே என்ற தனிமை உணர்வுகூட உண்டாகாமல் என்னோடு ஒரு தேவன் இருக்கிறார். அவர் கல் அல்ல, உலோகம் அல்ல, வெண்கலம் அல்ல. அவர் பேசும் தேவன், ஜீவனுள்ளவர், எங்களை பாதுகாப்பவர், சூளையின் வேகத்தை தணிக்கிறார். எங்கள் நடுவே உலாவுகிறார், எனவே நாங்கள் பயப்பட மாட்டோம். முழு பாபிலோனுமே பாழான தெய்வங்களை வழிபட்டாலும், அந்நிய தேசமானாலும், நீர் நிறுத்தின சிலையை (கடவுள் அல்ல) வணங்க மாட்டோம் என்ற வீரவசனம் பேசி, விசுவாச வாழ்வை நிலை நாட்டின அன்றைய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் தேவனே தேவன்; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான் அரசன் (தானி.3:15-29), எனவே விசுவாசத்துடன் புருஷனை போல் இருக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். தானியேலை போல சாட்சியாக வாழ்ந்துகாட்டி, **விக்கிரகத்திற்கு பின்னாலே போனவர்கள் தேவன் பக்கம் வரும் காலம் வரும்.**

சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிக்கேடு செய்ததில்லை என்றான். என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம் பண்ணப்படுகிறது; அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும். தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதினான் (தானி. 6:22,26,27).

எனவே விக்கிரக வல்லமை அழிய **ஆவியில் வைராக்கிய புருஷனாயிருங்கள்.** அந்நிய ஆவிகளின் வணக்கம் நிறுத்தப்பட விடாப்பிடியான **ஜெபிக்கும் புருஷனாயிருங்கள்**. வழிபாடுகள், கேளிக்கைகள், திருவிழாக்கள் நிறுத்தப்பட **விசுவாச புருஷனாயிருங்கள்.** கர்த்தர் பக்கம் ஜனங்கள் திரும்பி வர புறஜாதியார் நடுவில் **சாட்சியுள்ள புருஷனாயிருங்கள்.** இராஜா முதல் தேசம் வரை குடிமக்கள் மத்தியில் தேவன் மாற்றத்தை தருவார்.

## சேமிக்கலாமா?




கிறிஸ்தவர்கள் எதிர்காலத்திற்காக சேமிக்கலாமா? என்ற கேள்வியைக் கேட்டால் சேமிக்கலாம் என்று சொல்கிறவர்களும் உண்டு. சேமிக்கக்கூடாது என்று சொல்கிறவர்களும் உண்டு. சேமிக்கக்கூடாது என்கிறவர்கள் பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம் (மத்தேயு 6:19). நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படக்கூடாது (மத்தேயு 6:31-34) அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்குத் தாரும் (மத்தேயு 6:11) என்று இயேசு சொன்னதை ஆதாரமாகச் சொல்லி வாதிடுவார்கள். சேமிக்கலாம் என்கிறவர்கள் எகிப்தில் பஞ்சம் வருகிறது என்பதை யோசேப்பு மூலம் அறிந்த பார்வோன் யோசேப்பின் மூலம் பஞ்ச காலத்திற்குத் தேவையான தானியங்களைச் சேர்த்து வைத்ததையும் (ஆதியாகமம் 41:48,49), இயேசு 5 அப்பங்களையும் மற்றும் 2 மீன்களை வைத்து ஐயாயிரம் பேரை போஷித்து 12 கூடை நிறைய எடுத்து வைத்ததையும் (யோவான் 6:13). சேமிக்கிறவர்களை நீதிமொழிகள் புத்தகத்தில் ஞானவான் என்று சொல்லப்பட்டிருப்பதையும் (நீதிமொழிகள் 21:20) கூறி வாதிடுவார்கள்.

வேதத்தை நாம் கிரமமாகப் படித்தால் சேமிப்பது பாவம் என்று எங்கேயும் சொல்லவில்லை. மாறாக பல இடங்களில் அது சேமிப்பதை ஊக்குவிக்கிறது. அதே நேரம் சேமிப்பதில் நமக்கு உள்ள அணுகுமுறை, குணாதிசயங்கள், ஏன்? எதற்கு? சேமிக்கிறோம் என பல காரியங்களைக் குறித்து நாம் சிந்தித்து விட்டு சேமிக்க வேண்டும். சேமிக்கும்பொழுது நம்முடைய நம்பிக்கை கிறிஸ்துவை விட்டு விட்டு பணத்தின்மேல் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சேமிக்கும்போது பொருளாசை கூடவே கூடாது. கஞ்சனத்தனமாக இருந்து பணத்தைச் சேமிக்கக்கூடாது. முறைகேடான வழியில் பணத்தை சம்பாதித்து சேமிக்கக் கூடாது. ஏழைகளுக்கும் தேவையானவர்களுக்கும் முடிந்தவரை கொடுத்து சேமிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுக்குக் கொடுக்காமல் சேர்த்து வைக்கக்கூடாது.

### சேமிக்க சில வழிமுறைகள்

1. நமக்கு எவ்வளவு வருமானம் வருகிறதோ அதை முறையாக செலவு செய்ய நல்ல செயல்திட்டம் தேவை. அதற்கு Budget போட்டு செலவு செய்தல் வேண்டும்.
2. நமது இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவைகள் நமது வருமானத்திற்கு ஏற்றவாறு திட்டமிட்டு அமைக்கப்பட வேண்டும்.
3. செலவு செய்யும்போது அத்தியாவசிய தேவை எது, அநாவசிய தேவை எது என்பதை உணர்ந்து சிக்கனமாக செலவு செய்ய வேண்டும். சிக்கனம் என்கிற பெயரில் கஞ்சத்தனம் கூடாது.
4. நமது அத்தியாவசிய தேவைகள், கர்த்தருக்கான காணிக்கைகள் இவைகள் எல்லாம் போக நம் வருமானத்தில் குறைந்தது 20% நாம் சேமிக்க வேண்டும்.

5. ஆடம்பர செலவுகள் செய்யும்போது அல்லது தகுதி மீறிய செலவுகள் செய்யும்போது தேவையில்லாத கடன்கள் ஏற்படுகிறது. இதன் மூலம் நாம் நமது சேமிப்பை இழக்கிறோம். எனவே தேவ ஞானத்தோடு தீர்மானம் எடுத்து செலவு செய்ய வேண்டும்.

6. சேமித்த பணத்தை வங்கிகள் அல்லது அரசாங்க நிறுவனங்கள் நடத்தும் சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து சேமிப்பை பயனுள்ளதாக மாற்றலாம். அளவுக்கு மீறி ஆசைப்பட்டு, அதிக வட்டி கிடைக்கும் என்று சொல்லி தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதைத் தவிர்க்க வேண்டும். சேமிப்பு நம் குணநலனை ஒழுங்கு செய்கிறது. நம் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் தேவையான நேரத்தில் பயன்படுகிறது. மேற்கண்ட காரியங்களை மனதிற்கொண்டு செயல்படுவோம். ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வோம்.

Er.ஜெயராஜ் மாணிக்கம்

## ஜெபம்பண்ணுங்கள்

| | |
|---|---|
| **அ**திகாலையில் ஜெபம்பண்ணுங்கள் | மாற்கு 1:35 |
| **அ**ந்தரங்கத்தில் ஜெபம்பண்ணுங்கள் | மத்தேயு 6:6 |
| **இ**டைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | அப். 6:4; எபே. 1:16; கொலோ. 4:2; 1தெச. 1:4; 5:17 |
| **இ**ரவும் பகலும் ஜெபம்பண்ணுங்கள் | லூக்கா 2:37;6:12 |
| **உ**பவாசித்து ஜெபம்பண்ணுங்கள் | அப்போஸ்தலர் 13:3 |
| **உ**றுதியாய் ஜெபம்பண்ணுங்கள் | அப்போஸ்தலர் 2:42; ரோமர் 12:12. |
| **ஊ**க்கமாய் ஜெபம்பண்ணுங்கள் | லூக்கா 22:44; அப். 12:5; யாக். 5:16 |
| **எ**ப்பொழுதும் ஜெபம்பண்ணுங்கள் | அப்போஸ்தலர் 10:2 |
| **எ**ல்லா இடங்களிலும் ஜெபம்பண்ணுங்கள் | 1 தீமோத்தேயு 2:8 |
| **எ**ல்லாருக்காகவும் ஜெபம்பண்ணுங்கள் | 1 தீமோத்தேயு 2:1 |
| **ஒ**ருமனமாய் ஜெபம்பண்ணுங்கள் | அப்போஸ்தலர் 1:14 |
| **க**ண்ணீரோடு ஜெபம்பண்ணுங்கள் | எபிரெயர் 5:7 |
| **க**ருத்தாய் ஜெபம்பண்ணுங்கள் | யாக்கோபு 5:17 |
| **செ**ம்மையாய் ஜெபம்பண்ணுங்கள் | நீதிமொழிகள் 15:8 |
| **சோ**ர்ந்துபோகாமல் ஜெபம்பண்ணுங்கள் | லூக்கா 18:1 |
| **த**னிமையாய் ஜெபம்பண்ணுங்கள் | 2 நாளாகமம் 7:14 |
| **வி**சுவாசமாய் ஜெபம்பண்ணுங்கள் | மத்தேயு 21:22 |
| **வி**ழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் | மத்தேயு 26:41; 13:13; 2 தீமோ. 1:3 |
| **ஸ்**தோத்திரத்தோடு ஜெபம்பண்ணுங்கள் | பிலிப்பியர் 4:6 |
| **ஜா**க்கிரதையாய் ஜெபம்பண்ணுங்கள் | 1 பேதுரு 4:7 |



# மிஷனரிப் பணியும் ஸ்தல சபையும்


## Rev. கலை தேவதாசன்

மேற்பார்வையாளர், செங்கல்பட்டு பிராந்தியம்
உதவி இயக்குநர், வடமேற்கு மிஷன்


ஒரு மனிதனுடைய ஆரோக்கியத்தை அவனது சுறுசுறுப்பு, உழைக்கும் வலிமை, மன உற்சாகம் கொண்டு அளவிடுகிறோம். என்றைக்கு வேலை செய்யும் வலிமையையும், வாய்ப்பையும் அவன் இழக்கிறானோ அன்றே அவன் முதுமையானவனாகவோ அல்லது நோய்வாய்ப்பட்டவனாகவோ கருதப்படுகிறான். பொருளாதார நிலையில் அவனைச் சார்ந்திருக்கும் குடும்பமும் இனி அவரை நம்பி பிரயோஜனம் இல்லை என்ற முடிவுக்கு வந்து விடுகிறது.

ஒரு ஸ்தல சபை ஆரோக்கியமாக இருக்கிறதா? உயிரோட்டமாக இருக்கிறதா? என்பதையும் இதே அடிப்படையில் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

அது வெறுமனே உலர்ந்த எலும்புகள் போல காட்சியளிக்கிறதா? அல்லது தசைகள் மூடிய அலங்காரமான எலும்புக்கூடாக, ஆனால் **உயிரற்ற-ஜீவனற்ற** நிலையில் காணப்படுகிறதா என்பதை (எசே.37:8) அதன் உயிரோட்டமான **செயல்பாட்டின்** மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஒரு சபை கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றி விசுவாசிகளை பக்தி விருத்தியடையச் செய்யவும், சுவிசேஷ வேலைக்காக பயிற்சி கொடுக்கும் தொடர்பணியிலும் ஈடுபட்டால் அது உயிரோட்டமான சபையாக செயல்படுகிறது என்று பொருள் (எபே.4:11-13).

இதனால் தான் மெதடிஸ்ட் இயக்கத் தந்தை ஜான் வெஸ்லி ஒரு ஸ்தல சபையில் இருந்து சுவிசேஷ வேலையை எடுத்துவிட்டால், பின்பு அதற்கு வேறு என்ன வேலை இருக்கிறது என்று கேட்கிறார்.

சபை சிறியதா? பெரியதா என்பதல்ல கேள்வி, செயல்படும் சபையா? செயல்படாத சபையா? சபைக்குள் உயிர் இருக்கிறதா? உயிரற்ற சபையா? என்பதே கேட்கப்பட வேண்டிய கேள்வி.

இந்தியாவில் உள்ள 2 லட்சத்திற்கும் அதிகமான சபைகள், உயிர்பெற்று, **உள்ளூர் சுவிசேஷத்திலும், உலக சுவிசேஷத்திலும்** (Global Evangelism) தீவிரமாக செயல்பட்டால், நமது காலங்களிலேயே தேசம் கர்த்தர் வசம் திரும்புவதைக் காணமுடியும்.

### I. சபை முன் இருக்கும் சவால்

1:1 சுவிசேஷ ஊழியத்தின் விளைவுகள், அல்லது நோக்கம் என்பது வெறுமனே **ஆத்தும ஆதாயம்** என்ற ஒற்றைச் சொல்லில் இந்நாட்களில் சுருக்கிப் பார்க்கப்படுகிறது (அப்.17:17).

1:2 ஆதிச் சபையின் அசுர வளர்ச்சிக்கு முக்கிய காரணம், சுவிசேஷம் அறிவித்தலின் விளைவாக சபை நிறுவுதல் முக்கிய எதிர்பார்ப்பாக இருந்திருக்கிறது (அப்.9:31).

1:3 அன்றைய சபைகள், உலக சுவிசேஷகர் பிரயாணம் செய்து சுவிசேஷம் அறிவிப்போருக்கு, (Itinerary Evangelist) இளைப்பாறும் இடமாக இருந்திருக்கிறது. (சத்திரம் போன்றது) (3 யோவான் 5ம் வசனம்)

1:4 அன்று இருந்த சபைகளை இவ்விதம் விவரிக்கலாம்.

1. ஒ ரு ஊரில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது (அப்.17:2).

2. ஒப்புக் கொடுத்தவர்களைக் கொண்டு ஒரு ஆராதனைக் குழு அல்லது சபை (வீட்டுச் சபை) ஆரம்பிக்கப்பட்டது (17:4).

3. அந்த சபைகளை நடத்தும் மூப்பர்கள் (போதகர்கள்) அப்போஸ்தலர்களால் நியமிக்கப்பட்டார்கள் (தீத்து 1:5).

4. அந்த சபை மற்றொரு சபை பிறக்க காரணமாயிற்று (எபேசு சபை, கொலோசெய சபை)

5. ஒவ்வொரு ஊரிலும் பல சபைகள் (வீட்டுச் சபைகள்) இருந்தன. அந்தந்த சபைகளை நிர்வகிக்க ஒரு மூப்பர் இருந்தார். அந்த ஊர் வழியாக கடந்து செல்லும் மிஷனரிகளை உபசரித்து, போஷித்து, பாதுகாக்கும் அமைப்பாக அன்றைய சபைகள் இருந்தன (3 யோவான்).

6. இப்படி புதிய சபைகள் பெருக, ஏற்கனவே இருந்த சபைகள் காரணமாயின.

7. இன்றைக்குள்ள சவால், தனது தேவையைச் சந்திக்கவே சபை காலமெல்லாம் போராடும் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. எனவே தனது ஊரைத் தாண்டி பிற ஊர்களுக்கு அனுப்பப்பட வேண்டிய சுவிசேஷ ஊழியரை, அனுப்பும் உலக சுவிசேஷ ஊழிய **தரிசனம்** (Global Mission) **மிக குறைவாக** இருப்பதே இன்றைய சவால்.

## II. ஏன் நமது சபைகள் மிஷனரி ஊழியத்தில் ஈடுபாடு காட்ட வேண்டும்.

### A. வேதாகம பதில்

1. பிரதான கட்டளையின்படி சபை உள்ளூரில் மட்டுமல்ல பூமியின் கடைசி எல்லை வரை செய்யப்படும் நற்செய்தி ஊழியத்திற்கும் பொறுப்பானது. (மத்.28:18-20; அப். 1:8; மாற்கு 16:20).

### B. நடைமுறை பதில்

1. எந்த ஒரு சபை தனது ஊரை தத்தெடுத்து நற்செய்தி ஊழியம் செய்கிறதோ அது வளர்கிறது.

2. தனது ஊருக்கு அப்பால் நடைபெறும் மிஷன் ஊழியங்களை ஜெபத்தினால் தாங்க பழகும் சபை(யே) பின்னாட்களில் **தாராளமாக கொடுக்கும்** பொருளாதார வளர்ச்சி அடைகிறது.

3. மிஷன் ஊழியங்களை ஜெபத்தினால் தாங்கும் சபைகள், உதாரத்துவமான காணிக்கையினால் தாங்கும் சபைகள் தான் பின்னாட்களில் அவர்கள் சபையிலிருந்து மிஷனரிகளை அனுப்பும் பாக்கியம் பெறுகிறது.

### C. எச்சரிப்பு

எனது சபை எண்ணிக்கையிலும் பொருளாதாரத்திலும் வளர்ந்த பிறகு நான்

மிஷனரி ஊழியத்திற்கு தாராளமாக, ஏராளமாக கொடுப்பேன் என அநேக சபைகள் நினைப்பதுண்டு. ஆனால் உண்மையில் நமது சபை மிஷனரி ஊழியத்திற்காக எந்த ஒரு சிறிய பிரயத்தனம் செய்யாதிருந்த போதும் நமது சபைகளில் உள்ள மக்களோ வேறு மிஷன் இயக்கங்களுக்கு தாராளமாக ஏற்கனவே கொடுக்க ஆரம்பித்திருப்பார்கள். தேசம் அழிகிறது, வடஇந்தியா அழிகிறது யார் நமது காரியமாக போவார் என்ற அறைகூவல் விடுத்து ஏராளமாய் பொதுவான ஜெப இயக்கங்கள் எல்லா ஊர்களிலும் இன்று பெருகி வருகின்றன, நாம் அமைதியாக இருந்தால்... நமது மக்கள் காத்துக் கொண்டிருப்பதில்லை ஞாயிறன்று நமது சபைக்கும் மிஷன் ஊழியங்களுக்காக ஜெபிக்க, கொடுக்க வேறு இடங்களுக்கும் சென்று விடுவார்கள். இதுதான் யதார்த்தம்.

## இறுதியாக

சபை வளர்ச்சியே நமது இலக்காக இருக்க வேண்டும் என்பது தவறல்ல. எதற்காக வளரவேண்டும் என்று கர்த்தர் நம்மிடம் கேட்டால் என்ன பதில் சொல்வோம்?

நமது சபைகள் இருப்பதற்கும், வளர்வதற்கும் காரணம் கடைசி மனிதனுக்கும் சுவிசேஷம், செல்ல வேண்டும். எல்லை கடந்தும், கலாச்சாரம் கடந்தும் சுவிசேஷம் போக வேண்டும், மிஷன் ஊழியத்தில் நாமும் பங்குபெற வேண்டும் என்று ஏங்கும் சபைகளாக நமது சபைகள் மாறட்டும்.

ஒவ்வொரு சபையின் தரிசனமும் ஒரு மிஷனரி இயக்கத்திற்கு ஒப்பானதாக பெரிதாகட்டும், உங்கள் சபை மக்கள் இப்படி உற்சாகம் அடைய ஆயத்தமாக இருக்கிறார்கள், பயன்படுத்திக் கொள்ளும் போதகர்கள் பாக்கியசாலிகளை பக்திவிருத்தி அடையச் செய்வதில் கவனம் செலுத்தும் சபைகள் (பரிசுத்தம், ஜெபம், வேதவசனத்தில் வளர்வது) **உள்ளூர் சுவிசேஷ ஊழியம் முதல் உலக சுவிசேஷ ஊழியம்** வரை கவனம் செலுத்தும் சபை ஏற்படுத்தப்பட்ட நோக்கம் நிறைவேற சபையார் இயேசுவை கிறிஸ்துவின் சாயல் அடைகிறார்கள். சபை வெற்றியடைகிறது (எபே. அதி.4 ; அப்.10:38).

ஆதிசபை ஜனங்களை சீஷராக்குவதிலும் (பக்தி விருத்தி) சுவிசேஷ வேலை செய்ய வைப்பதிலும் முழு வெற்றி பெற்ற சபை என்றே சொல்ல வேண்டும் (அப். அதி.2; 8:4).

ஆதிசபையை பொருத்தமட்டில் சீஷரை உருவாக்கி, உலகத்தில் பயனுள்ள கருவிகளாக (கனிகொடுக்கும் உயிருள்ள கிறிஸ்தவர்கள்) உலகத்திற்குள் அனுப்புவதற்காகவே, சபை இருந்தது என்பது தெளிவாக தெரிகிறது.

அவர்களது சபையில் பல இலாகாக்கள் இருந்து, அதில் ஒரு இலாகா சுவிசேஷ ஊழிய இலாகா என்று இருந்ததில்லை. மாறாக சுவிசேஷ வேலையைச் செய்வதற்கே சபை செயல்பட்டிருக்கிறது மட்டுமல்ல கற்றுக் கொடுக்கும் பள்ளியாக, பணிமனையாக சபை செயல்பட்டது. அவர்களது பிரதான பணியே **முழுச்சபையையும் ஆயத்தப்படுத்துவது, அனுப்பிவைப்பது** என்பதே. (அப்.அதி.6) அனைவரும் அனைவருக்கும் என்பதே சபையின் பிரதான சுலோகம் (எபே.அதி.4; மத்.28:19-20).



# குர்-ஆன் பகுதி- 1


## Rev. ஜேக்கப் இஸ்ரேல்

இயக்குநர், இஸ்லாமியர் ஊழியங்கள்


**பரிசுத்த வேதாகமமே உண்மையானது என்றும் மாற்றப்படவில்லை என்று உறுதியான குர்-ஆனின் சாட்சி.**

பரிசுத்த வேதாகமத்திலுள்ள தவ்றாத்தும் (பழைய ஏற்பாடு) இன்ஜீலும் (புதிய ஏற்பாடு) தேவனால் அருளப்பட்டு, எழுதப்பட்ட வார்த்தைகளாகும்.

கிறிஸ்தவ பரிசுத்த வேதாகமத்தை குறித்து "குர்-ஆன்" கூறும் சாட்சியை குர்-ஆனை வாசிக்கிறவர்கள் அறிந்து கொள்ளலாம். இத்தெளிவான சாட்சி உண்மையாகவே வியக்கத்தக்கதுதான். இவ்வேதங்கள் **(தவ்றாத்-மோசேக்கு அருளப்பட்ட பஞ்சாகமங்கள், சபூர்-தாவீதுக்கு அருளப்பட்ட சங்கீத புத்தகங்கள், இன்ஜீல்-ஆண்டவராகிய இயேசுவுக்கு அருளப்பட்ட நான்கு சுவிசேஷங்கள்) குர்-ஆன் அருளப்பட்ட காலத்தில் (610-632AD)** இருந்தன. அவை யூதர்களாலும், கிறிஸ்தவர்களாலும் வாசிக்கப்பட்டும், உபதேசிக்கப்பட்டும் இருந்தது. சூரா 2:40-44; 2:113; 3:71-78 அவற்றிற்கும் இன்று இருக்கின்ற வேதாகமத்திற்கும் பல வித்தியாசங்கள் உண்டு என்றும், இப்போது கிறிஸ்தவர்கள் கையில் இருப்பது முன் காலத்தில் இருந்த வேதாகமம் இல்லை என்றும் சரித்திர ஆதாரத்துடன் யாராவது நிருபிக்க முடியுமா? ஒரு காலத்தில் இருந்த பரிசுத்த வேதாகமம் மாற்றப்பட்டது அல்லது கெடுக்கப்பட்டது என்று சில இஸ்லாமியர்கள் சொல்லுகிறார்கள் மற்றும் யூதர்களிடமும் கிறிஸ்தவர்களிடமும் இன்றிருக்கும் வேதத்திலிருந்து வித்தியாசமான ஒரு பரிசுத்த வேதாகமம் முன் காலத்தில் இருந்ததாக சிலர் கூறுகின்றனர். இதற்கு இந்நாள் வரை எவரும் எவ்வித நிரூபணமும் கொடுக்கவில்லை. இன்றுள்ள வேதத்திலிருந்தும் வித்தியாசமான ஒன்று ஏதாவதொரு காலத்தில் இருந்ததாக எந்தவிதமான ஆதாரமும் சரித்திரத்தில் இல்லை. முஹமதுவின் காலத்தில் இருந்த அதே வேதாகமம் எந்தவித மாற்றமும் இல்லாமல் இன்றைக்கும் கிறிஸ்தவர்களிடம் இருக்கிறது. அதை கீழுள்ள குர்ஆனின் மூலம் அறியலாம். சூரா 2:41; 5:43; 2:89; 2:140; 21:7 மேற்கூறப்பட்ட சூராக்களின் மூலம் நாம் புரிந்து கொள்வது என்னவென்றால் வேதத்தையுடையவர் களுக்குத் தரப்பட்ட முன்பிருந்த வேதங்கள் அவர்கள் சொந்தமாய் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வேதாகமம் வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தாகவோ, ரத்து செய்யப்பட்டதாகவோ அல்லது திருத்தப்பட்டதாகவோ எந்தவிதமான அத்தாட்சியுமில்லை.

பரிசுத்த வேதாகமத்தினுடைய தவ்றாத் தன்மை யாராலும் கற்பனை செய்து பார்க்க கூடியதோ, அல்லது கூட்டிச் சேர்க்கக் கூடியதோ அல்ல. உண்மையாகவே குர்-ஆன் அந்த வேதங்களை (தவ்றாத், சபூர், இன்ஜீல்) மெய்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றை பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. வேதாகமத்தைக் குறித்து குர்-ஆன் அருளும் சாட்சியைக் கீழ்காணும் ஆயத்துகளில் காணலாம்

தவ்றாத் என்னும் வேதத்தையும் நிச்சயமாக நாம்தான் வெளிப்படுத்தினோம். அதில் நேர்வழியும் பேரொளியுமிருக்கின்றது. அல்லாவுக்கு முற்றிலும் வழிபட்டு நடந்த நபிமார்கள் அதனைக் கொண்டே யூதர்களுக்கு மார்க்க கட்டளையிட்டு அவர்களுடைய

பண்டிதர்களாகிய ரப்பியூன்களும், குருமார்களாகிய அஹ்பார்களும், அல்லாஹ்வுடைய வேதத்தைக் காப்போர் என்ற முறையில் அதனைக் கொண்டே தீர்ப்பளித்து வந்தார்கள். அன்றியும் இவர்கள் அதற்கு சாட்சிகளாகவும் இருக்கிறார்கள் (சூரா 5:44).

“உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தையும் நாம் தாம் உம்மீது அருளினோம். இது தனக்கு முன்னுள்ள மற்ற வேதங்களையும் உண்மையாக்கி வைக்கின்றது. அன்றியும் அவைகளைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. ஆகவே நபியே! நீர் அல்லாஹ் உமக்கு அருளிய இதனைக் கொண்டே அவர்களுக்கிடையில் தீர்ப்பளியும்” (சூரா 5:48).

நன்மை செய்தோரின் மீது நம்முடைய அருட்கொடையைப் பூர்த்தியாக்கி வைக்கும் பொருட்டு பின்னரும் நாம் மூஸாவுக்கு ஒரு வேதத்தை கொடுத்தோம். அதில் ஒவ்வொரு விஷயமும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அன்றியும் நேரான வழியாகவும் இறைவனின் அருளாகவும் இருக்கிறது. அவர்கள் தங்கள் இறைவனை சந்திப்போமென்று உறுதி கொள்ளும் பொருட்டே அதனைக் கொடுத்தோம் (சூரா 6:154).

அவர்களுடைய அடிச்சுவடுகளிலேயே மரியமுடைய மகன் ஈஸாவையும் நாம் அனுப்பி வைத்தோம். அவர் தன் முன் இருந்த தவ்றாத்தையும் உண்மையாக்கி வைப்பவராக இருந்தார். அன்றியும் அவருக்கு இன்ஜீல் என்னும் வேதத்தையும் நாம் அருளினோம். அதில் நேர்வழியும், பிரகாசமும் இருக்கின்றன. அது தன் முன்னுள்ள தவ்றாத்தை உண்மையாக்கி வைக்கின்றது. பயபக்தியுடையோருக்கு அது ஓர் **நேர் வழிகாட்டியாகவும், நல்லுபதேசமாகவும் இருக்கின்றது** (சூரா 5:46).

**தவ்றாத்தையும் இன்ஜீலையும் கனப்படுத்தவும் அவற்றை உபயோகிக்கவும் குர்-ஆன் நம்மை அழைக்கின்றது.** “வேதத்தையுடையவர்களே! (இஸ்லாமியர்கள்) நீங்கள் தவ்றாத்தையும், இன்ஜீலையும் உங்கள் இறைவனிடமிருந்து, உங்களுக்கு அருளப்பெற்ற மற்றவைகளையும் மெய்யாகவே நீங்கள் கடைபிடித்தொழுகும் வரை நீங்கள் எதிலும் சேர்ந்தவர்கள் அல்லர்” (சூரா 5:68)

ஆகவே இன்ஜீலையுடையவர்கள் அதில் அல்லாஹ் அறிவித்திருக்கும் கட்டளைகளின் பிரகாரமே தீர்ப்பளிக்கவும். எவர்கள் அல்லாஹ் அருளிய கட்டளைகளின் பிரகாரம் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக கபட பக்திகாரர்கள் தாம்! (சூரா 5:47).

விசுவாசிகளே, (இஸ்லாமியர்கள்) நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் அவன் தன்னுடைய இத்தூதர் மீது அருளி இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் விசுவாசியுங்கள். எவன் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் இறுதி நாளை நிராகரிக்கிறானோ அவன் வழிகேட்டில் வெகுதூரம் சென்றுவிட்டான் (சூரா 4:136 ).

இவர்களுக்குத்தான் வேதத்தையும் அதிகாரத்தையும் நபித்துவத்தையும் நாம் கொடுத்திருந்தோம். ஆகவே அவர்களை இவர்கள் நிராகரித்துவிட்டபோதிலும். அவைகளை நிராகரிக்காத மக்களை நிச்சயமாக நாம் ஏற்படுத்தி விடுவோம் (சூரா 6:89).

நபியே! நாம் உமக்கு அருட்செய்திருக்கும் இதில் சிறிதும் சந்தேகம் கொள்ளாதீர். நீர் சந்தேகித்தால் உமக்கு முன்னர் அருளப்பெற்ற வேதங்களை வாசிப்போரிடம் நீர் கேட்டுப்பாரும் (சூரா 10:94).

நபியே! உமக்கு முன்னர் வஹீ (வெளிப்பாடு) கொடுத்து நாம் அவர்களிடம் அனுப்பி வைத்த தூதர்களெல்லாரும் ஆண்களேதாம். ஆகவே இவர்களை நோக்கி நீங்கள் இதனை அறிந்து கொள்ளாமலிருந்தால் முந்திய வேதங்களைக் கற்றோரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள் என்று கூறுவீராக! (சூரா 16:43).

நபியே! உமக்கு முன்னரும் உம்மைப்போன்ற ஆண்களேயன்றி நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை. உமக்கு அறிவிக்கிற பிரகாரமே நம்முடைய கட்டளைகளை அவர்களுக்கும் வஹீ (வெளிப்பாடு) மூலம் அறிவித்தோம்.

நபியே உமக்கு முன்னரும் உம்மைப்போன்ற ஆண்களேயன்றி நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை. உமக்கு அறிவிக்கிற பிரகாரமே நம்முடைய கட்டளைகளை அவர்களுக்கும் வஹீ (வெளிப்பாடு) மூலம் அறிவித்தோம்.

ஆகவே இவர்களை நோக்கி நீர் கூறும் இதனை நீங்கள் அறியாவிட்டால், முன்னுள்ள வேதத்தையுடையோரையேனும் கேட்டறிந்து கொள்ளுங்கள் (ஸீரா 21:7; 42:3; 4:163).

பகுதி-2 தொடரும்

---

## உங்களைப் பற்றிய சாட்சி என்ன?

**ஆபிரகாம் :** தேவனுக்கு பயப்படுகிறவன் (ஆதி. 22:12). தேவனுடைய சிநேகிதன் (ஏசாயா 41:8). விசுவாசிகளின் தகப்பன் (ரோமர் 4:12).

**மோசே :** பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவன் (எண்.12:3) தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் (எண்.12:7).

**யோபு :** உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் (யோபு 1:1).

**எலியா :** பரிசுத்தவான் (2 இராஜா. 4:9), தேவனுடைய மனுஷன் (1 இராஜா. 17:24), கருத்தாய் ஜெபிக்கிறவன் (யாக். 5:17).

**எஸ்றா :** தேறின வேதபாரகன். இருதயத்தை பக்குவப்படுத்தியவன் (எஸ்றா 7:10,11).

**தாவீது :** இருதயத்திற்கு ஏற்றவன் (1 சாமு.13:14; 16:7).

**மரியாள் :** தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டவள் (லூக். 10:38-42).

**நாத்தான்வேல் :** கபடமற்ற உத்தம இஸ்ரவேலன் (யோவான் 1:47).

**அப்பொல்லோ :** வேதாகமத்தில் வல்லவன், ஆவியில் அனலுள்ளவன், தைரியமாய் போதிக்கிறவன். சாதுரியவான் (அப். 17:24,25).

**தேமேத்திரியு :** எல்லாராலும் நற்சாட்சி பெற்றவன் (3 யோவான் 1:12).

**யோவான் :** அன்பாயிருந்த சீஷன் (யோவான் 21:20).

**ஆக்கில்லா-பிரிஸ்கில்லா :** கழுத்தைக் கொடுத்தவர்கள் (ரோமர் 16:3-5).

**சகரியா-எலிசபெத்து:**கர்த்தருடைய சகல கற்பனைகளின்படியும், நியமங்களின் படியும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக்கா 1:5,6).

**ஏனோக்கு :** தேவனுக்கு பிரியமானவன் (எபி. 11:5).

**பர்னபா :** அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான் (அப். 11:24).

“நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே வந்து உன் எஜமானனுடைய சந்தோஷத்தில் மகிழ்ந்திரு” என்ற வார்த்தைகளுக்கு தகுதியாய் வாழ்வோம். சாட்சியைக் காத்துக்கொள்வோம்!.



# வேதத்தை மிஞ்சிய வெளிப்பாடுகள்!

## கள்ள உபதேசத்தின் வெளிப்படையான அடையாளம்!

**Rev.R.மதன்ராஜ்**

ஆசிரியர், மெட்ராஸ் ஏ.ஜி. வேதாகமக் கல்லூரி

வேதமே இறுதி அதிகாரம்! வேதத்தை மிஞ்சி இன்று தேவன் ஒன்றை வெளிப்படுத்தக்கூடுமோ? இந்த கேள்விக்கு பாரம்பரியம் "இல்லை" என்று ஆணித்தரமாய் பதிலளிக்க, பெருகிவரும் கள்ள உபதேசங்கள் வேதத்திற்கு நிகராய் தங்கள் சுய வெளிப்பாடுகளை முன்வைத்து வேதத்தின் புனிதத் தன்மை பாதிக்கக்கூடிய வகையில் செயல்படுவது குறிப்பிடத்தக்கது. சில உபதேசங்கள் வேதத்திற்கும் அப்பாற்ப்பட்டதாய் அதன் ஸ்தாபகருடைய வெளிப்பாடுகளை முக்கியத்துவப்படுத்துகின்றது. இந்த வரம்பு மீறிய செயல்பாடுகள், உபதேசத்திற்கும் கள்ள உபதேசத்திற்கும் இடையில் இருக்கும் வரையறையை துணிகரமாய் மீறுகின்றது.

### வேதத்திற்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகளின் தன்மை

வேதத்தின் வெளிப்பாடுகளாய் கருதப்படும் 66 புத்தகங்களை மிஞ்சிய அனைத்து வெளிப்பாடுகளும் வேதத்திற்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகளாகவே கருதப்படுகிறது. வேதத்தை தழுவி எழுதப்படும் அல்லது வேத விளக்கவுரைகள் போன்றவைகள் வேதத்தின் சத்தியங்களை பாரம்பரியங்களுக்கு விளக்கும் நேர்த்தியான கருவிகள் என்றாலும் அவைகள் இறுதி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியவைகள் அல்ல. பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட வேதத்திற்கே இறுதி அதிகாரம் உள்ளது. இன்று வேதத்தை பின்னுக்கு தள்ளும் மனிதனின் சுய வெளிப்பாடுகள் தவறான உபதேசங்களுக்கு அடித்தளம் அமைக்கின்றது. மேலும் வேதத்தை அதின் சரியான சூழலில் நின்று வியாக்கியானம் செய்யாமல், இன்று தேவன் தங்களுக்குக் கொடுத்த வெளிப்பாடு என்ற நிலையில் நின்று வியாக்கியானம் செய்வது வேதத்தின் அதிகாரத்தை இரண்டாம் பட்சமாக்குகிறது என்றால் மிகையாகாது. தேவன் இன்று பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு வெளிப்பாடுகளை தொடர்ந்து கொடுக்கிறார் என்பது உண்மை எனினும், அவை வேதத்தின் வரையறைக்கு மிஞ்சியதாய் இல்லாமல் அவற்றிற்கு உட்பட்டு இருக்கவேண்டும் என்பதே தேவன் நியமிக்கிற வரையறை.

வேதத்தை பின்னுக்குத் தள்ளி தங்கள் சுயவெளிப்பாட்டை மையப்படுத்தும் ஒரு சில பிரபலமான கள்ள உபதேசங்களைக் குறித்து இக்கட்டுரையில் பார்ப்போம்.

**(1) மோர்மோனிசம் (பிற்கால பரிசுத்தவான்கள்):** இந்த உபதேசத்தினர், வேதத்திற்கு அப்பாற்பட்டு, அதின் ஸ்தாபகராகிய ஜோசப் ஸ்மித் என்பவருக்கு தேவன் வெளிப்படுத்தியதாய் கூறப்படும் காரியங்களை "மோர்மோனியர்களின் புத்தகம்" (Book of Mormon) என்ற தொகுப்பாய் வெளியிட்டு, அதை வேதத்திற்கு நிகராய் கருதுகிறார்கள். பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் இவருக்கு தரிசனத்தில் தோன்றி தங்களை வெளிப்படுத்தியதாகவும், திருச்சபைகள் கறைபடிந்திருப்பதால், ஒரு புதிய ஸ்தாபனத்தை துவக்கும்படிக்கு இவர்களிடத்தில் கூறியதாகவும் இவர் அறிவித்து, இந்த ஸ்தாபனத்தை 1830ஆம் ஆண்டு அமெரிக்க

ஐக்கிய நாட்டில் ஆரம்பித்தார். இன்று பல இலட்சம் அங்கத்தினர்களை இந்த ஸ்தாபனம் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வேதத்தில் குழப்பம் ஏற்படும் தருவாயில், வேதமா அல்லது மோர்மோனியர்களின் வெளிப்பாடா என்று கேள்வியெழும்பும்போது, மோர்மோனியர்களின் புத்தகத்தை இறுதி அதிகாரமுள்ள வார்த்தையாய் இவர்கள் முக்கியப்படுத்துகிறார்கள். இது வேதத்தின் அதிகாரத்தை தரம் குறைத்து காண்பிக்கிறது.

**(2) கிறிஸ்தவ அறிவியல்:** இவர்கள் வேதாகமத்தை அதிகாரமுள்ள வார்த்தையாய் கருதினாலும், இதன் ஸ்தாபகரான மேரி பேக்கர் எட்டியினால் எழுதப்பட்ட “அறிவியலும் ஆரோக்கியமும்: வேதாகமத்தின் திறவுகோல்” (Science and Health with Key to the Scriptures) என்னும் சுய வெளிப்பாடுகள் உள்ளடங்கிய புத்தகத்தையே அடிப்படையாய் வைத்தே வேதத்தை விளங்கிக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றனர். இவர்கள் வேதத்தை உள்ளபடி வியாக்கியானம் செய்யாமல், மேரி பேக்கர் எட்டியின் வெளிப்பாட்டின் அடிப்படையில் ஆவிக்குரிய ரீதியாகவே வியாக்கியானம் செய்கின்றனர். “அறிவியலும் ஆரோக்கியமும்: வேதாகமத்தின் திறவுகோல்” என்ற இந்த புத்தகத்தை வேதத்திற்கு நிகரான தெய்வீக வெளிப்பாடாய் இவர்கள் இன்றும் கருதுகின்றனர்.

வேதத்தின் சம்பவங்களை ஒரு தனிமனிதனின் வெளிப்பாட்டை அடிப்படையாய் வைத்து அறிந்துகொள்ள முயலும் கிறிஸ்தவ அறிவியல் இயக்கத்தின் இந்த செய்கை, தெய்வீக வெளிப்பாட்டை இரண்டாம் பட்சமாக்கி, தனிமனித வெளிப்பாட்டை முன்னிலைப்படுத்துகிறது. அவ்வாறு செய்வது வேதம் சொல்ல முயலும் சத்தியத்தை அடிப்படையில் நிராகரிக்கிறது. மாறாக, பெரும்பாலான உபதேச குழப்பத்திற்கு நேராய் வழிநடத்துகிறது. உதாரணமாக, கிறிஸ்தவத்தின் அடிப்படை உபதேசமாய் கருதப்படும் இயேசுவின் உயிர்த்தெழுதலை இவர்கள் மறுதலிக்கின்றனர். இயேசுவின் மாம்ச தன்மையை இவர்கள் வெளிப்படையாய் நிராகரித்து, அவரை ஒரு தெய்வீக சிந்தை என்று தத்துவ ரீதியாய் அடையாளப்படுத்த முயற்சிக்கின்றனர் தெய்வீக சுகமாக்குதலை அடிப்படையாய் வைத்து, வேதத்திற்கு ஒவ்வாத இன்னும் பெரும்பாலான சத்தியங்களை கொண்டுவரும் இந்த கிறிஸ்தவ இறையியலின் பார்வை வேதத்திற்கு புறம்பானது.

**(3) யேகோவா சாட்சிகள்:** திரித்துவத்தையும் இயேசுவின் தெய்வீக ஆளத்துவத்தையும் நிராகரிக்கும் யேகோவா சாட்சிகள் இயல்பில் வேதத்தை அதிகாரமுள்ள வார்த்தையாய் கருதுவதாக வெளிப்படையாய் அறிவிக்கின்றனர். ஆனால் “புது உலக மொழிபெயர்ப்பு” (New World Translation) என்னும் ஒரே குறிப்பிட்ட ஆங்கில மொழிபெயர்ப்பையே பயன்படுத்த இவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இந்த மொழிபெயர்ப்பை இவர்கள் தங்களுடைய போதனைக்கு சாதகமாய் வடிவமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த மொழிபெயர்ப்பில், வேத ஆசிரியர்களினால் எழுதப்பட்ட பெரும்பாலான காரியங்களை இவர்கள் மாற்றி வடிவமைத்திருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் வேதத்தை அதிகாரமுள்ள வார்த்தை என்று வெளிப்படையாய் அறிவித்தாலும், அதை வியாக்கியானம் செய்யும் அதிகாரம் இவர்களுடைய தலைமைச் செயலகமாய் கருதும் காவற்கோபுரத்தின் (Watch Tower Society) அதிகார குழுவினரிடமிருந்தே வரக்கூடும் என்று நம்ப தூண்டப்படுகின்றனர். ஒரு

சாதாரண விசுவாசி வேதத்தை வியாக்கியானம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களால் அது சாத்தியமில்லை என்றும், தேவனால் நேரடியாய் நியமிக்கப்பட்ட காவற்கோபுர தலைமை அதிகாரக் குழுவினரால் மட்டுமே அது சாத்தியம் என்று போதிக்கின்றனர்.

இவர்களுடைய இந்த வியாக்கியான கட்டுப்பாடு, வேதத்தின் இறுதி அதிகாரத்தை பின்னுக்கு தள்ளி, மனித தலைவர்களின் புரிதல்களை முக்கியத்துவப்படுத்துகிறது. இது வேதத்தின் சத்தியத்திற்கும், அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம் (1 பேதுரு 2:9) என்னும் வேதத்தின் போதனைக்கும் முற்றிலும் புறம்பானது. வேதத்தின் அதிகாரத்தை மாம்ச நபர்களின் தீர்மானத்திற்கு உள்ளாக்கும் இவர்களின் இந்த நம்பிக்கை, பல்வேறு வியாக்கியான குழப்பங்களுக்கு நேராய் வழிநடத்தி, இன்னும் உபதேச புரட்டர்களாய் உருவெடுக்க தூண்டுதலாய் அமைந்திருக்கிறது.

மேற்கண்ட மூன்று பிரபலமான கள்ள உபதேசங்களுக்கும் உள்ள ஒரு ஒற்றுமை என்னவெனில், இவர்கள் வேதத்தை இறுதி அதிகாரமாய் கருதவில்லை. இவற்றின் ஸ்தாபகர்களுடைய தனிப்பட்ட வெளிப்பாடுகளை இறுதி அதிகாரமாய் கருதியதின் விளைவாய் கள்ள உபதேசங்களாய் உருவெடுத்து, இன்று வேத புரட்டர்களாய் மாறிவிட்டனர். சுயவெளிப்பாடுகள் கடைசி அதிகாரமுள்ள வெளிப்பாடாய் மாறும்போது வேதாகமம் புறந்தள்ளப்படுகிறது. வேதத்தை புறந்தள்ளும் எந்த வெளிப்பாடும் தேவனிடத்திலிருந்து வந்ததல்ல.

ஏன் தேவன் இன்று ஒரு தனிப்பட்ட நபருக்கு தெய்வீக சத்தியத்தை வெளிப்படுத்தமாட்டாரா? என்று நாம் கேள்வி கேட்கக்கூடும். வேதத்தின் வெளிப்பாட்டிற்கும் இன்று தனிப்பட்ட நபர்கள் பெற்றுக்கொள்ளும் வெளிப்பாட்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. வேதத்தின் வெளிப்பாடு அனைத்து காலகட்டத்திற்கும் ஏற்புடைய உலகளாவியது; அது முற்றுபெற்றுவிட்டது. இனி ஒரு புதிய வெளிப்பாட்டை வேதத்தில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு உலகத்தின் இறுதிவரை மனித வாழ்வுக்கு தேவையான அனைத்தும் அதில் இடம்பெற்றிருக்கிறது. நம்முடைய தனிப்பட்ட வெளிப்பாடுகள் நம்முடைய காலத்திற்கும், நாம் வாழும் சமுதாயத்திற்கும் உட்பட்டவைகள். அவைகள் வேதத்தின் சத்தியத்தையும் ஒழுக்கநெறிகளையும் தழுவியே வியாக்கியானம் செய்யப்படவேண்டுமே தவிர, வேதத்தை முரண்படுத்தும் வகையில் புரிந்துகொள்ளப்படுதல் கூடாது. வேதத்தின் சத்தியத்தை முரண்படுத்தும் வகையில் அமையும் வெளிப்பாடுகள் தேவனிடத்திலிருந்து வந்ததல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு, தேவன் என்னை இரண்டு திருமணம் செய்துகொள்ள சொல்கிறார் என்று ஒருவர் சொன்னால், அதை அப்படியே திருச்சபை ஏற்றுக்கொள்ள முடியாது; மாறாக, அதை வேதத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஒழுக்கநெறியின் அடிப்படையிலேயே நிதானிக்கவேண்டும். வேதம் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணத்தை கண்டிக்கிறது. ஆகையால் தனிப்பட்ட வெளிப்பாடுகள் வேதத்தின் கொள்கைகளை மறுதலிப்பதாகவோ, வேதத்தில் பரவலாய் ஸ்தாபிக்கப்பட்ட ஒழுக்கநெறிகளை புறக்கணிப்பதாகவோ, தேவ நாமத்திற்கு தூஷணத்தைக் கொண்டுவரக்கூடியதாகவோ இருக்கக்கூடாது. எனவே அவைகள் வேத வரையறையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படுதல் அவசியம். வேதமே இறுதி அதிகாரம்!

# தேவ ஆலோசனை



Rev. Steve Asir
(President - Christ's Ambassadors)

அன்பான கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

நம் எல்லாருடைய வாழ்விலும் எல்லாக் காரியத்துக்கும் நல் ஆலோசனை தேவை. நல்ல ஆலோசனைகள் சரியான முடிவுக்கு நேராகவும், மகிமைக்கு நேராகவும் வழிநடத்தும். விசேஷமாய் வாலிபப் பிராயத்தில் நாம் எடுக்கும் தீர்மானங்களே நம்முடைய எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. நம்முடைய தேவனாகிய கர்த்தர் சங் 32:8 ன் படி

> *நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.*

நமக்குப் போதித்து நம் மீது கண்கள் வைத்து நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். தேவனுடைய ஆலோசனையைப்போல மேன்மையானது வேறெதுவுமில்லை. மனிதனுடைய ஆலோசனைகள் அநேகம் இருந்தாலும் தேவனுடைய ஆலோசனையே சரியானதாய் இருக்கும்.

## தேவ ஆலோசனை எப்படிப்பட்டது?

**1. நிலைநிற்கும் : -**

> *கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறைதலைமுறையாகவும் நிற்கும். சங் – 33:11*

தேவ ஆலோசனை நித்தியகாலமாக நிற்கும், மனிதர்களுடைய ஆலோசனை காலங்களுக்கு ஏற்ப மாறும். எவ்வளவு படித்தவர்களுடைய ஆலோசனையாய் இருந்தாலும், அனுபவசாலியின் ஆலோசனையாய் இருந்தாலும் அவைகள் எதுவுமே மாற்றத்திற்குரியதே. ஆனால் கர்த்தர் தரும் ஆலோசனை ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது.

இதன் தொடர்ச்சி 31 பக்கம் பார்க்க...



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


**பாஸ்டர். பெவிஸ்டன்**

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். தேவன் உங்களுக்கு சிறப்பான பாதுகாப்பையும், ஆரோக்கியத்தையும், தெய்வீக ஞானத்தையும் அருளி உங்களை வாழ்ந்திருக்கச் செய்வாராக. புதிய கதையுடன் உங்களை சந்திக்க வந்திருக்கிறேன். வாங்க கதை கேட்கலாம்.

ஒரு வனப்பகுதிக்கருகே அமைந்திருந்த கிராமத்தில், பல ஆடுகள் கொண்ட ஓர் மந்தை வாழ்ந்து வந்தது. அந்த ஆடுகள் தினமும் அருகிலுள்ள பசுமை நிறைந்த புல்வெளியில் திரண்டு சென்று மேய்ந்து வந்தன.

இந்த ஆடுகளுக்கு பாதுகாப்பாக, சில வேட்டை நாய்கள் மந்தையை சுற்றி நன்கு காவல் காத்து வந்தன. அவை எப்போதும் விழிப்புடன் இருந்தது. காட்டிலிருந்து வரும் மிருகங்கள் அல்லது ஆபத்துகளுக்கு எதிராக ஆடுகளை பாதுகாத்து வந்தன.

அருகிலுள்ள காட்டில் ஓர் ஓநாய் கூட்டம் இருந்தது. அந்த ஓநாய்களுக்கு ஆடுகளை பிடித்து உண்பதற்கு நோட்டமிட்டுக்கொண்டிருந்தது. ஆனாலும், நாய்களின் பாதுகாப்பு எப்போதும் உறுதியாக இருந்ததால், அவைகளால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஒருநாள், அந்த ஓநாய்களின் தலைவர், ஆடுகள் மேயும் இடத்திற்கு வந்து ஒரு கருத்தை முன்வைத்தான். "நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள். உங்களுடன் நாங்களும் நட்பை வளர்த்துக்கொள்ள விரும்புகிறோம். நீங்கள் நாய்களோடு மட்டுமே நட்பாக இருக்கிறீர்கள். ஏன் நாங்களும் உங்களோடு நட்பாக இருக்கக் கூடாதா? எங்களை ஏன் வெறுப்புடன் பார்க்கிறீர்கள்?" என அன்பான வார்த்தைகளை அள்ளி வீசியது.

இந்த வார்த்தைகள் சில ஆடுகளின் மனதில் சந்தேகத்தை விதைத்தன. நாய்கள் எப்போதும் கட்டுப்பாடுகளை விதிக்கின்றன; ஆனால் ஓநாய்களோ மென்மையாகவும் பாசமாகவும் பேசுகின்றன எனக் கூறி, ஆடுகள் நாய்களின் உறவை துண்டிக்க தொடங்கின.

சில நாட்களுக்குள், அந்த மந்தை முழுவதும் நாய்களின் அன்பையும் நம்பிக்கையையும் குறைத்து விட்டன. ஆடுகள், தங்களுக்காக உயிரைக் கொடுக்கத் தயாராக இருந்த நாய்களை விலக்கிவிட்டு, ஓநாய்களை அணுகத் தொடங்கின.

அந்த இரவு நாய்கள் அருகிலே இல்லாத வேளையில், ஓநாய்கள் தங்கள் படையுடன் மந்தைக்குள் நுழைந்தன. ஆடுகளெல்லாம் ஓய்வெடுத்து, உறங்கிக்கொண்டிருந்தன. ஓநாய்களுக்கு எந்த எதிர்ப்பும் இல்லாததால், மந்தையை முழுவதுமாக சுற்றி வளைத்துகொண்டது.

அடுத்த நாள் காலையில், அந்த புல்வெளி வெறுமையானது. அங்கே ஒலி

எதுவுமில்லை. ஆடுகளும் இல்லை.. நாய்களும் இல்லை... எச்சரிக்கையாயிருந்த நட்பும் இல்லை.

அன்பான தம்பி, தங்காய்.. நமக்காக உயிரையும் கொடுக்கத் தயங்காத உண்மையான உறவுகளான பெற்றோர், உடன்பிறந்தோர், ஆசிரியர்கள், பெரியவர்கள், சிநேகிதர்கள் போன்றவர்கள் நம்மை காத்து வழிநடத்தி வருகின்றனர். சில நேரங்களில் அவர்கள் நம்மை எச்சரித்து, நம் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவது போல் தோன்றலாம். ஆனால், அவர்கள் நம்முடைய நலனுக்காகத்தான் அதனைச் செய்கிறார்கள்.

தங்களை பாதுகாக்கும் நாய்களை விலக்கி, இனிமையாகப் பேசும் ஓநாய்களின் நட்பை ஏற்ற ஆடுகள், இறுதியில் தங்கள் வாழ்க்கையையே இழந்தன. அதேபோல், நம்மை நேசிக்கும் உறவுகளை விலக்கி, வெளிப்புற இனிமைக்காக நட்பை மாற்றிக்கொண்டால், அது பேரழிவை ஏற்படுத்தும். நல்ல உறவுகளை மதிப்போம்; பாதுகாப்பும் நிம்மதியும் அதில்தான் இருக்கின்றன.

'சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்' (நீதி. 27:6) என பைபிள் கூறுகிறது.

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

---

29-ம் பக்க தொடர்ச்சி

**2. அருமையானது : –**

> *தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். சங் – 139:17*

தேவனுடைய ஆலோசனைகள் அருமையானது. நாம் கிரகிக்க முடியாத, நாம் யோசிக்க முடியாத நல்ல ஆலோசனைகளைக் கர்த்தர் தருகிறார். கர்த்தர் தரும் ஆலோசனையில் காரியங்கள் நடக்கும் போது அது எல்லாருக்கும் சமாதானமாகவே முடியும். பவுலின் வாழ்வில் எந்த சூழ்நிலைமையிலும் வெளிப்பட்ட தேவ ஆலோசனை அவனுக்குத் திடன் கொடுக்கவும், தைரியப்படுத்தவும் ஏதுவாகவே இருந்தது.

**3. முடிவிலே மகிமை : –**

> *உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். சங். 73:24*

கர்த்தருடைய ஆலோசனையில் ஒரு காரியம் நடைபெறும் போது அதன் முடிவு மகிமையானதாகவே இருக்கும். சிக்லாகிலே தேவ ஆலோசனை பெற்ற தாவீது தான் இழந்த
திருப்பிக்கொண்டு மகிமையாய் திரும்பினான். நம் வாழ்வில் தேவ ஆலோசனை ஒருபோதும் தவறான அல்லது வேதனையான முடிவுக்குள் கொண்டுபோகாது. முடிவு மகிமையாகவே இருக்கும்.

**கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!**



# பயத்தை மேற்கொள்ளுதல்
## OVERCOMING FEAR


**Rev.K. ராஜா**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்


கிறிஸ்துவில் அன்பான மாணவ, மாணவிகளுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

எதற்குமே பயப்படாத ஒரு மனிதன் இந்த உலகத்தில் இருப்பதற்கு நிச்சயமாகவே வாய்ப்பு இல்லை. எல்லா மனிதருக்கும் ஏதாவது ஒரு காரியத்தில் பயம் இருக்கத்தான் செய்யும். பள்ளியில் சேர்ந்தவர்களுக்கு படிப்பைக் குறித்த பயம், படிப்பவர்களுக்கு பரீட்சையைக் குறித்த பயம், பரீட்சை எழுதியவர்களுக்கு result குறித்த பயம், படித்து முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பைக் குறித்த பயம் என ஒவ்வொரு சூழ்நிலையிலும் பயம் இருக்கும். ஆகவே, ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் சந்திக்கும் பயத்தை குறித்துப் புரிந்துகொள்ள நாம் முயற்சி எடுப்போமானால், அதைக் கையாள்வதும், மேற்கொள்வதும் எளிதாகிவிடும்.

**பொதுவாக பயம் இரண்டு வகைப்படும்.**

1. நேர்மறையான பயம் (POSITIVE FEAR)
2. எதிர்மறையான பயம் (NEGATIVE FEAR)

நேர்மறையான பயம் நமக்கு நன்மையை கொண்டு வரும். எதிர்மறையான பயம் நமக்கு தீமையைக் கொண்டு வரும். நாம் இங்கு எதிர்மறையான பயத்தை புரிந்து கொண்டு, அதை மேற்கொள்வதைக் குறித்து பார்க்கப் போகிறோம்.

**பயம் என்றால் என்ன? WHAT IS FEAR?**

எது நடக்கக் கூடாதோ, அது நடந்து விடுமோ என்று மனதில் தோன்றும் உணர்ச்சியே பயம். பயம் என்பது ஓர் உணர்வு / உணர்ச்சி. Fear is the feeling of something that shouldn't happen, Even it does happen. Fear is a feeling or emotion.

**பயத்தை புரிந்து கொள்ளுங்கள்: UNDERSTAND THE FEAR**

- பயம் என்பது மனித மூளையின் பிரிக்க முடியாத ஓர் அம்சம். உங்கள் படிப்பைக் குறித்து நீங்கள் கொண்டிருக்கும் பயம் இயல்பான ஒன்றுதான்.
- நீங்கள் இப்போது இருக்கும் நிலையிலிருந்து, சென்றடைய விரும்பும் அடுத்த நிலைக்குச் செல்வதற்கான முயற்சியில் தொடர்ந்து முன்னேறிச் செல்லும்போது, இயற்கையாகவே பயம் இருக்கும். அதை நீங்கள் எதிர்கொள்ளத்தான் வேண்டும்.
- பயம் என்பது நாம் எச்சரிக்கையாகவும், விழிப்போடும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிற ஓர் அறிகுறி மட்டுமே.

**இயல்பான பயம் எதிர்மறையான பயமாக மாற காரணங்கள்: CAUSES OF NORMAL FEAR TURNS INTO NEGATIVE FEAR**

நமக்குள் இருக்கும் இயல்பான பயஉணர்வு எதிர்மறையான பயமாக மாறி, நம்மை பாதிப்பதற்கு நாம் தான் காரணம் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதோ அந்த காரணங்கள்.

- பிறரோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் பழக்கம். அது தேவையற்ற ஒருவித பயத்தை உருவாக்குகிறது.

- கடந்த காலத்தில் ஏற்பட்ட தோல்வியைப் பற்றிய நினைவுகள் மற்றும் அதைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பது. இதுவும் தேவையற்ற ஒருவித பய உணர்வைக் கொண்டு வரும்.
- எந்த ஒரு செயலையும், செய்ய முயற்சி செய்யாமலேயே பார்த்தவுடன் தன்னால் முடியாது என்ற முடிவுக்கு வந்துவிடுவது.
- செய்ய வேண்டிய வேலையை, செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் தள்ளிப்போடுவது. இதுவும் சிறிய வேலையைக்கூட செய்ய முடியாத பெரிய வேலையாகக் காண்பித்து பயத்தை உண்டாக்கும்.

**பயம் என்னவெல்லாம் செய்யும்: WHAT CAN FEAR DO?**

- பயம் நம்மேலேயே நமக்கு சந்தேகத்தைக் கொண்டு வரும்.
- பயம் நம்மை பலவீனப்படுத்தும்.
- பயம் நம்மில் பதட்டத்தை உண்டாக்கும்.
- பயம் நம்மில் மன அழுத்தத்தை கொண்டு வரும்.
- பயம் நம்முடைய அனைத்து காரியங்களிலும் பின்னடைவை ஏற்படுத்தும்.
- பயம் ஒட்டுமொத்தத்தில் நம்மை முடக்கிப்போடும்.

**பயத்தை மேற்கொள்ளுவது எப்படி: HOW TO OVERCOME FEAR**

**• முழுவதும் தேவனை சார்ந்து கொள்ளுங்கள்:**

....அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய், உன் கால் இடறாது (நீதி.3:23).

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலி.4:13).

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நாம் அசைக்கப்படுவதில்லை (சங்.18:6).

**• நீங்கள் தனித்துவமானவர்கள்**

உங்களை தேவன் Unique-க்கானவர்களாகத் தான் படைத்திருக்கிறார். உங்களுக்கென்று தனித்திறமைகளைக் கொடுத்திருக்கிறார். ஆகவே, பயப்படாதீர்கள்.

**• மற்றவர்களோடு ஒப்பிடாதீர்கள்**

தேவையில்லாமல் உங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டு சோர்ந்து போகாதீர்கள். உங்கள் திறமையை வளர்த்துக் கொண்டு அதை முழுமையாக வெளிப்படுத்துங்கள்.

**• முதல் முயற்சியிலேயே முழு நேர்த்தியை எதிர்பார்க்காதீர்கள்**

எப்போதும் முழுமையாக்க முயல வேண்டாம். உங்களுக்கு தைரியமும் நம்பிக்கையும் தரும் எளிய அல்லது சிறிய காரியத்திலிருந்து தொடங்குங்கள். தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டு தொடர்ந்து முன்னேறுங்கள். Don't strive for perfection all the time. Start with something small and simple that gives you courage and confidence.

அன்பான மாணவ, மாணவியரே! தேவனை நம்பி, தைரியமாய் முன்னேறுங்கள். யோசேப்போடு, யோசுவாவோடு, தாவீதோடு இருந்து அவர்களை எல்லா பயங்களுக்கும், திகில்களுக்கும் விலக்கிப் பாதுகாத்து உயர்த்தினதுபோல, தேவன் உங்களையும் உயர்த்தி மேன்மைப்படுத்துவாராக. உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.



# உங்கள் பிள்ளைகள் செழித்து வளருவார்கள்


**Rev. S.P. ராஜசெல்வம்**

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நம்முடைய பிள்ளைகள் அனைவரும் சிறந்த முறையில் வளர வேண்டும் என்பதே பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களாகிய நம் அனைவரும் விரும்புகிற காரியமாக இருக்கிறது. இந்த உலகில் ஒரு சொல் வழக்கு இருக்கிறது: உயிருள்ள அனைத்தும் வளரும். உதாரணமாக செடிகள், மரங்கள், மீன்கள் மற்றும் விலங்குகள் இவையனைத்தும் வளருகின்றன. அதுபோல மனிதர்களாகிய நாமும், குறிப்பாக சிறுபிள்ளைகளும் சிறந்த முறையில் செழித்து வளர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

சங்கீதம் 144:12 கூறுகிறது: அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக்கன்றுகளைப்போலவும்... இருப்பார்கள். இந்த வசனத்தின்படி, நம்முடைய பிள்ளைகளும் ஓங்கி வளர்ந்து செழித்திருக்க தேவன் கிருபைச் செய்வாராக.

மேலே குறிப்பிட்ட வசனத்தில் விருட்சம் என்பதின் அர்த்தம் என்னவென்றால் ஒரு ஆரோக்கியமான செடியானது வளர்ந்து

பெரிய மரமாக மாறி, பெரிய கிளைகளுடனும் வேர்களுடன் வளர்ச்சி அடைந்து, இருதயத்திற்கு இதமான நிழலைத் தரும் ஒரு மரத்தை குறிக்கிறது. இதைப்போல் நம்முடைய பிள்ளைகளும் இப்படிப்பட்ட மரத்தைப் போல செழித்து வளர வேண்டுமென்று நாமும் விரும்புகிறோம்; தேவனும் விரும்புகிறார். அப்படி அவர்கள் செழித்து வளர வேண்டுமானால் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த இதழில் நாம் தொடர்ந்து பார்ப்போம்.

### 1) வேர்கள் ஆழமாய் இருக்க வேண்டும்

ஒரு மரமானது வளர்ந்து அசையாமல் நிலைத்து நிற்பதற்கு அதனுடைய வேர்கள் நிலத்திற்குள் ஆழமாக இருக்க வேண்டும். வேர் என்பது கர்த்தர்மேல் பிள்ளைகள் வைக்கிற நம்பிக்கையை குறிக்கிறது. எரேமியா 17 :7- 8 வசனங்களில், கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான் என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. எனவே சிறு பிள்ளைகள் தங்களுடைய சிறு வயதிலிருந்தே கர்த்தர்மேல் நம்பிக்கை

வைக்கும்படிக்கு அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வளர்க்க வேண்டும். எந்தவொரு சின்ன தேவைக்கும் அவர்கள் கர்த்தரையே முதலாவது நம்பி வாழ்வார்களானால், அவர்கள் தண்ணீரண்டையில் நாட்டப்பட்ட மரத்தைப் போல செழித்து ஓங்கி வளருவார்கள்.

## 2) இலைகள் செழித்திருக்க வேண்டும்

ஒரு மரத்தில் இலைகளிருப்பது மிக முக்கியமான ஒன்றாக பார்க்கப்படுகிறது . அடர்த்தியான இலைகளிருக்கிற மரம் அதிக நிழலைத் தருகிறது; அதேவேளையில், பார்ப்பதற்கு அழகாகவும், பசுமையாகவும் இருக்கிறது.

சங்கீதம் 1:3-ல், அவன் இலையுதிராயிருக்கிற மரத்தை போல் இருப்பான் என்று நாம் வாசிக்கிறோம். இது பிள்ளைகள் ஆண்டவருக்காக சாட்சியாய் வாழ்வதைக் குறிக்கிறது. சிறு பிள்ளைகளை ஆண்டவருக்காக சாட்சியுள்ள ஜீவியத்தோடு வளர்க்க வேண்டும். அதாவது, அவர்களுடைய பேச்சில், நடக்கையில் மற்றும் செயல்பாடுகளில் மற்றவர்களுக்கும், சபைக்கும் மற்றும் பெற்றோருக்கும் முன்மாதிரியான மற்றும் சாட்சியுள்ள பிள்ளைகளாய் நடத்த வேண்டும். அப்போது அவர்கள் இலையுதிராயிருக்கிற மரத்தைப்போல் செழித்திருப்பார்கள்.

## 3) கனி கொடுக்க வேண்டும்

ஒரு மரமானது நல்ல கனிகளையும் கொடுக்க வேண்டும். ஒரு மரத்தின் கனியை வைத்து, அந்த மரத்தை அறிந்து கொள்ளலாம்.

மத்தேயு 7:17 கூறுகிறது, அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. பிள்ளைகளுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நல்ல நடத்தை, குணாதிசயங்கள் மற்றும் செயல்பாடுகள் மிக மிக முக்கியமான ஒன்றாகயிருக்கிறது. கனிகள் எதைக் குறிக்கிறது என்றால் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. சிறுபிள்ளைகள் தங்களுடைய சிறு வயதிலிருந்தே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று வளரும்போது, நல்ல கனிகளை கொடுப்பவர்களாக இருப்பார்கள்.

நீரோடையருகில் நாட்டப்பட்ட மரமானது நல்ல வளர்ந்து செழித்து கனிகளைக் கொடுப்பதற்கு என்ன தேவையெனில்:

- **நிலம் – ஆவிக்குரிய அடித்தளம்**
- **நீர் – பரிசுத்த ஆவியானவர்**
- **சூரிய ஒளி – ஆவிக்குரிய வெளிச்சம்**
- **வேர்கள் – விசுவாசம் அல்லது கர்த்தர்மேல் வைக்கிற நம்பிக்கை.**

ஒரு மரம் வளர்ந்து நல்ல கனிகளைக் கொடுப்பதற்கு நிலம், நீர், சூரிய ஒளி மற்றும் வேர்கள் அவசியமாய் இருக்கிறது. இதைப்போல பிள்ளைகள் நன்கு செழித்து வளர்ந்து நல்ல கனிகளைக் கொடுப்பதற்கு ஆவிக்குரிய நல்ல அடித்தளமும், பரிசுத்த ஆவியானவரின் துணையும், ஆவிக்குரிய சத்தியத்தைக் குறித்த வெளிச்சமும் மற்றும் கர்த்தர்மேல் வைக்கிற நம்பிக்கையும் அவசியம். அதன் விளைவாக உண்டாகிற நல்ல குணங்கள் (கனிகள்) பிள்ளைகளின் வாழ்க்கையில் இருக்குமானால், உண்மையாகவே அந்தப் பிள்ளைகள் செழிப்பாக வளரும். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் இப்படியே வளர செய்து, உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

# வார்த்தைகள் செய்யும் ஜாலங்கள்

மொழியானது எல்லா உறவுகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மொழியின் மூலமாகத்தான் நாம் நம்முடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். எல்லா படைப்புகளிலும் மனிதனுக்கு மாத்திரமே வார்த்தைகளால் பேச வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. நாம் பேசும் வார்த்தையானது வல்லமையுள்ளது. ஆதியிலே தேவன் சகலத்தையும் வார்த்தையினாலே சிருஷ்டித்தார். வார்த்தையினாலே இயேசு கிறிஸ்து பிணியாளிகளை சொஸ்தமாக்கினார். தேவையுள்ளோரின் தேவைகளைச் சந்தித்தார், மனமுடைந்தோரை ஆறுதல்படுத்தினார். வார்த்தைக்கு இருதயத்தை சொஸ்தப்படுத்தவும், காயப்படுத்தவும் வல்லமையுண்டு; வார்த்தை ஆவியை உயிர்ப்பிக்கவும், கொல்லவும் முடியும்; வார்த்தை உறவைச் சீராக்கவும், சீரழிக்கவும் முடியும். **மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது** என்று நம்முடைய வேதம் கூறுகிறது (நீதி.18:21). நம்முடைய அன்றாட வாழ்வில் வார்த்தையானது எப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதை நடைமுறை உதாரணங்களைக் கொண்டு பார்க்கலாம்.

**என்னை மன்னித்துவிடுங்கள் I AM SORRY** (லூக்கா 15:17-24).

ஒரு சில நேரங்களில் நாம் தெரிந்தோ தெரியாமலோ மற்றவர்களைக் காயப்படுத்தி விடுகிறோம். உன் சகோதரனைக் காயப்படுத்துவது பாவம் என்று இயேசு சொல்கிறார். நம்முடைய குற்றங்களை ஒப்புக்கொள்வதோடு மற்றவர்களை காயப்படுத்தியிருப்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். **"என்னை மன்னியுங்கள்"** என்று நாம் சொல்லும் பட்சத்தில் நம்முடைய மனதும் சுத்தமாகும். மற்றவருடைய காயத்தையம் ஆற்ற முடியும். உடைந்த உறவு அதன் மூலம் சரி செய்யப்படும். கெட்ட குமாரன் தன் தவற்றை உணர்ந்து தன் தகப்பனிடத்தில் வந்து "என்னை மன்னியுங்கள்" என்று சொன்னான். அவன் தகப்பன் அவனை மன்னித்தபோது அந்த வீட்டுக்குப் பெரிய மகிழ்ச்சி உண்டாயிற்று.

**நன்றி THANK YOU** (லூக்கா 17:11-19).

**"நன்றி"** என்ற வார்த்தை அதை சொல்லுபவருக்கு மிகுந்த மனமகிழ்ச்சியைத் தரவல்லது. அதே சமயம் அதைக் கேட்பவர் உள்ளத்திலும் சமாதானத்தையும் வரவல்லது. நன்றி சொல்லும்போது அது உறவுகளைத் தட்டி எழுப்ப வல்லதாயிருக்கிறது. ஒன்பது குஷ்டரோகிகள் இயேசுவிடம் வந்து நன்றி தெரிவிக்காவிட்டாலும், வந்து நன்றி தெரிவித்த ஒரே குஷ்டரோகியின் நிமித்தம் இயேசு மிகுந்த சந்தோஷப்பட்டார். நன்றியில்லா இருதயம் குளிர்ந்து கெட்டதாயிருக்கிறது. ஆனால் நன்றியுள்ள இருதயமானது சந்தோஷமும் மிகுந்த மகிழ்ச்சி நிறைந்ததுமாயிருக்கிறது.

**பரவாயில்லை IT'S ALRIGHT** (யோவான் 8:1-4).

நமக்கு விரோதமாய் தவறு செய்தவர்கள் மன வருந்தும்போது "பரவாயில்லை, மன்னித்துவிட்டேன்" என்று நீங்கள் சொல்வீர்களானால், நீங்கள் காயப்படவில்லை என்பதையும், நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள் என்பதையும்

அந்த வார்த்தை தெரியப்படுத்துகிறது. இயேசு,"இனிபாவம் செய்யாதே" என்று மனதுருகி கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று மரணத் தீர்ப்பு வழங்கிய மதத்தலைவர்களுக்கு மத்தியில் அந்த வார்த்தையைச் சொன்னார். இதன் மூலம் இயேசு பாவம் செய்த அந்த பெண்ணிடம் "பரவாயில்லை" என்கிற அர்த்தம் கொள்ளும் வார்த்தையைக் கூறினார். உன்னை ஏற்றுக்கொள்கிறேன். பழையவைகளை நினைத்துக் கவலைப்படாதே என்று கூறினார்.

**நீ நல்லதையே செய்தாய் YOU DID A GOOD THING** (மாற்கு 14:3-9).

நாம் நமக்கு மேலானோர், நமக்குக் கீழானோர் மற்றும் நம்மைச் சுற்றிலும் இருப்போருடைய அங்கீகாரத்தை எதிர்பார்ப்பது இயல்வு. அங்கீகாரம் கிடைக்காத இடத்தில் நாம் சோர்ந்துபோக வாய்ப்புண்டு அல்லது எதிர்த்து நிற்க ஏதுவுண்டாகும். விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலத்தை மரியாள் உடைத்து அவர் சிரசின் மேல் ஊற்றினபோது சீஷர்களில் சிலர் முறுமுறுத்தனர். ஆனால் இயேசுவோ "தன்னால் இயன்றதைச் செய்தாள். என்னிடத்தில் நற்கிரியைகளை செய்திருக்கிறாள்" என்று சொல்லி அவளை மெச்சிக்கொண்டார். பாராட்டு மற்றவர்களை ஆவியிலே உற்சாகமடையச் செய்யும். பாராட்டு இல்லாத இடத்தில் மனதிலே சோர்வை கொண்டுவரும்.

**சிறப்பாய் செய்துள்ளாய் EXCELLENT** (மத்.16:13-19; ரோமர் 12:5)

உம்முடைய சகோதரர் அல்லது சகோதரியோ ஒரு தேர்வில் வெற்றிபெறும் போது அல்லது ஒருவர் ஒரு காரியத்தில் சிறப்பான சாதனைப் படைக்கும்போது நாம் என்ன சொல்லிப் பாராட்டுவோம். "வாழ்த்துக்கள்; எல்லாவற்றையும் விட மிகச் சிறத சாதனை படைத்துவிட்டாய்" என்று சொல்லுவோம் அல்லவா? இப்படி சொல்லும்போது உன் சகோதரனுடைய வெற்றியில், சாதனையில் நீ பொறாமைப்படாமல் மிகவும் மகிழ்ச்சியடைகிறாய் என்று பொருள். அது உன் இருதயத்தை ஆசீர்வதிக்கும். சந்தோஷப்படுகிறகளுடனே சந்தோஷப்படவேண்டும். 'மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன்' என்று பேதுரு அறிக்கை செய்தபோது, இயேசு அவனைப் பாராட்டி மகிழ்ந்தார்.

**நான் உன்னை நேசிக்கிறேன் I LOVE YOU** (யோவான் 13:34; 1 யோவான் 4:10-12)

அன்புதான் கிறிஸ்தவத்தின் சாராம்சம். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. கல்வாரி சிலுவையிலே இயேசு தம்முடைய அன்பை வெளிப்படுத்திவிட்டார். நாம் அன்பாயிருப்பது போலவே நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார். நாம் மற்றவர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்பதல்ல. நம்முடைய அன்பை வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டும். **நான் உன்னை நேசிக்கிறேன்** என்று நாம் சொல்லும்போது அது மற்றவருடைய இதயத்தைத் தொடவேண்டும். வார்த்தையானது அற்புதங்களைச் செய்யும். அது மற்றவருடைய காயத்தை ஆற்ற வல்லது. மற்றவருடைய இருதயத்தைச் சரிசெய்ய வல்லது; அது ஆத்துமாவை உயிர்பெறச் செய்ய வல்லது.

ஆகவே மேற்கூறிய வார்த்தைகளை அந்தந்த சூழ்நிலைகளில் அடிக்கடி பயன்படுத்துவோம்! உறவுகளை கட்டுவோம்! தேவனை மகிமைப்படுத்துவோம்!

## போட்டி எண் : 12 (சரியான விடைகள்)

| | | |
|---|---|---|
| 1. | யெரொபெயாம் | 1இராஜா.11:28 |
| 2. | ஆதாத் | 1இராஜா. 11:14 |
| 3. | நாபோத் | 1இராஜா. 21:13 |
| 4. | சீதோனியர் | 1இராஜா. 5:6 |
| 5. | சிம்ரி | 1இராஜா. 16:15 |
| 6. | யெகூ | 1இராஜா. 19:16 |
| 7. | ஆசா | 1இராஜா. 15:9,10 |
| 8. | சாலொமோன் | 1இராஜா. 3:4 |
| 9. | யோசபாத் | 1இராஜா. 22:4 |
| 10. | அதோனியா/ யோவாப் | 1இராஜா.1:50; 2:28 |
| 11. | எலியா | 1இராஜா. 17:1 |
| 12. | ஒபதியா | 1இராஜா. 18:3 |
| 13. | ஈராம் | 1இராஜா. 9:14 |
| 14. | சீமேயி | 1இராஜா. 2:8 |
| 15. | சாபூத் | 1இராஜா. 4:5 |
| 16. | ஈராம் | 1இராஜா. 7:13 |
| 17. | சாலொமோன் | 1இராஜா. 10:23 |
| 18. | அபிஷாக் | 1இராஜா. 1:3,4 |
| 19. | அதோராம் | 1இராஜா. 12:18 |
| 20. | நாதாப்/அபியா | 1இராஜா. 14:20,1 |
| 21. | பெனாதாத் | 1இராஜா.20:1 |
| 22. | இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் | 1இராஜா. 8:2 |

## போட்டி எண் : 12 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: S.முத்துலெட்சுமி; பிரபா; சகாய ஜெயராணி; சித்ரா பிளஸ்சி; மஞ்சு; கிரிஜா; V.மகேஷ்வரி; கிறிஸ்டி; இவாஞ்சலின்; லீதியாள்; சாந்தி; மாது; K.மகேஷ்வரி; கோகிலா; பியூலா; பிரின்ஸி ஜெனிபர்; J.சுமதி; ராதாமணி; கலாராஜம்; முத்துக்கோபால்; மயில்; E.கலா; டோரா; விஜி; மரகதம்; M.எஸ்தர்; T.கலா; ராணி பிளஸிங்; ஜெயசிலின்; பூங்கோதை; குளோரி; K.சாராள்; கனகவல்லி; யோபுராஜா; பிரபு; | **ஸ்ரீவில்லிபுத்தூர்**: வசந்தா; கிருபா; மாதவி; நெல்சன் செல்வராஜ்; வெங்கடவள்ளி; எஸ்தர் இந்திரா; மெசி; பாஞ்சாலி(Tr); R.காபிரியேல்; R.வசந்தா; M.சத்யா; அனிதா; குளோரி; அழகு நாச்சியார்; அபிராமி; |**கடையநல்லூர்**: ஸ்டெல்லா; ஆஷா தேவி; ஷெலினா பிரேம்; சத்யா சுரேஷ்; சந்தியா; வேணி; செல்வி கண்ணன்; மாரியப்பன் செல்வி; விக்டோரியா; பெல்சியா;| **சேத்துப்பட்டு**: சியாமளா; ரேணுகா; மாதரசி; ஷாலினி; ஜெயராணி; மரகதம்; சுகந்தி பெனடிக்; ரெக்ஸி ஈஸ்வரம்; லெஷ்மி காந்தா; | **தேனி**: செண்பகபுஷ்பா; முத்துரதி; ஜான்சி; கிருபா; திருவியச்செல்வி; கார்த்திகேயாயினி; தபீத்தாள் ராணி;|**திருநின்றவூர்**: சுகந்தி சாம்சன்; தெரசா; ஜெபமலர்; எஸ்தர் பவானி; ரோசி உலகரகன்; மாலதி;எழிலரசி; |**கோயம்புத்தூர்**: S.விக்டர்; கிறிஸ்டினா ரகுநாத்; மேரி டென்சில்; ரத்தினம்; கிறிஸ்டினா அபிகாயில்; குளோரிபால்; |**கவரைப்பேட்டை**: மணிமேகலை; இவாஞ்சலின்; தங்கம்; புவனா; நந்தினி; பிளஸ்ஸி வசந்த்; | **அன்புநகர்**: சுலோச்சனா; ரீனா; சலோமி பர்வின்; ஜெசி மெர்லின்; ஷெப்ரி மோனிஷா; சந்தியா; | **மடத்துக்குளம்**: சரண்யா; சுகன்யா; கிரேஸ்மேரி; சேர்மக்கனி; ஜெனிட்டா ஜூலியட் மேரி; பரிமளா; | **எடப்பாடி**: ஜோஸ் P.மேரி; கிருபாகரன்; அஞ்சலி அரசு; எமீமாள் கிறிஸ்டி; எஸ்தர் சாம்; |**இராதாபுரம்**: அருள்செல்வி; நித்யா; மல்லிகா; ஜெயா; ஜாஸ்மின்;|**தூத்துக்குடி**: புருசிமா; சில்வெஸ்டர்; ஜாய் செல்வி; சுகந்தி; பிரியா அகஸ்டின்;|**உக்கரன்கோட்டை**: முத்துச்செல்வி; ருக்குமணி; அன்னபாப்பு; குழந்தை திரசம்மாள்;|**ஆலங்குளம்**: ஸ்டெல்லா மேரி; பிளாரன்ஸ்; ரெஜினா சாரு; ஸ்டெல்லா; | **கள்ளக்குறிச்சி**: தங்கம் சாக்கோ; மகேஷ்வரி; யெஷூரன்; |**கொட்டிவாக்கம்**: எஸ்தர் விஜயராணி; அகஸ்டினா மதினா; அமுதவல்லி;|**ஆண்டிப்பட்டி**: பூங்கொடி; தேவ பாக்கியம்; புளோரியா;

## போட்டி எண் : 12 (சரியான விடை எழுதியவர்கள்...)

|**கோவில்பட்டி**: செல்வின் பால்; ரேச்சல்; மரியாள் ஜெயசீலி; |**அச்சிறுப்பாக்கம்**: சித்ரா; செல்வகுமாரி; தமிழ்ச்செல்வி; |**பழங்காநத்தம்**: கலைச்செல்வி; பாலசுந்தரி; ஞானம் ஜான்; **நாகலாபுரம்**: லில்லி ஜெனட் தங்கம்; ஷாலோம் இண்பெண்ட் சுஜந்த்; குளோரி; |**வேலூர்**: இஸ்ரேல் கார்த்திக்; ஸ்ருதி ஜேனட்; ஜெயமணி; |**இராமன்புதூர்**: அன்னம்மாள்; ஜான்சிராணி; லீதியாள்; அகரம்தென்: ஜாய் கிளாடிஸ்; ஜான்சி ராணி; |**பழனி**: பிரிசில்லா யோவான்; சாந்தி; |**நாகப்பட்டினம்**: கவிதா; ஜான்வெஸ்லி பிரிஸ்ஸில்லா;| **புளியங்குடி**: ஜெயமணி; ஜெப ஞானம்; | **உடுமலைப்பேட்டை**: சந்தனா மதன்; சூசன்னாள்; |**சேலம்**: ஜான்சி ராணி; டேட்ரீஷியா டேவிட்; **மோரை**: சந்திரா சாலமோன்ராஜ்; | **திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**கம்பம்**: சாந்த செல்வி; ஜோதி மணி; |**டெலானிபூர்**: ஜெயந்தி; ஜாக்லின்; | **நெல்வாய்**: அருணா; மலர்விழி; |**சுரண்டை**: ஜெயமேரி; குளோரி ஞானம்; |**வேப்பம்பட்டு**: J.ஜோஸ்மேரி; ஆர்த்தி; |**செய்துதுங்கநல்லூர்**: அன்பு; சாந்தி; |**மேல அனுப்பானடி**: அனிதா; ஜெயா;| **நீலகிரி**: சார்லஸ்; கவிதா; |**நாகர்கோவில்**: மரியநேசம்; வின்சென்ட்ராஜ்; |**நாகமலை :** ஆனந்தி; விஜிலா; |**திருச்சி**: ஜேஸ்மின் உஷா ராணி; சாந்தி; |**குற்றாலம்**: வேளாங்கண்ணி; மரியசெல்வம்; |**ஆறுமுகநேரி**: எஸ்தர் வெண்ணிலா; செல்வப்பிரியா; அனன்சி அருண்; சாத்தூர்: சரோஜா; | **நாசரேத்**: எஸ்தர்; மெர்சி; | **கொங்கந்தான்பாறை**: சந்திரா ஆல்பர்ட்; | **மேடவாக்கம்**: பியூலா ஜாய்ஸ் சுகந்தி; |**சிட்லபாக்கம்**: ரெபேக்காள்: | **பவூர்சத்திரம்**: ஜெசிலி; அருள் ஜூலி லீலா; |**சென்னை**: மெர்லின் ஹெலன் பிரிதியா; |**குரோம்பேட்டை**: கோமதி குமார்; வீராணம்: எப்சிபா; | **KTCநகர்**: பிரேமா ரூத்; |**வாடியூர்**: மெர்சி செல்வபாக்கியம்; |**கொட்டி**: ஷீலா சத்யராஜ்; | **மன்னார்புரம்**: விமலா; | **கூத்தாநல்லூர்**: கிளமாண்டின்; S.A.NT. பாஸ்டியன்; |**தஞ்சாவூர்**: தேவகுமார்; ஏஞ்சல் ரூபாவதி; | **திருப்பத்தூர்:** ரூத் தேவா; | **கட்டபெட்டு**: புஸ்பமாலா; |**திண்டுக்கல்:** லதா ஜான்சன்; |**முக்கூடல்**: முத்து கிருஷ்ணன்; |**அகஸ்தியர்பட்டி**: நிர்மலா; |**பொழிச்சலூர்**: மெர்ஸி சமாதானம்; | **திசையன்விளை**: செல்வபாக்கியம்; |**சொக்கம்பட்டி**: வசந்தி; | **நெய்யூர்**: ஷீலா ராபர்ட்; | **குலமங்கலம்:** சோபியா பிளாரன்ஸ்; | **K.P.வலசை**: A.P.சீலி; |**திருநகர்**: சித்ரா; |**படந்தால்**: விசித்ரா; |**வெள்ளகால்**; கலா; | **வடசேரி:** கிறிஸ்டி; |**மூலைக்கரைப்பட்டி**: T.தமிழ்ச்செல்வி; |**ஆரப்பாளையம்**: லதா ஜான்சன்; |**புதுக்கோட்டை**: லலிதா; | **கௌரிவாக்கம்:** சின்னராஜீ; |**கல்லல்**: அபிஷாக்; |**செம்பாக்கம்**: மரகதலீலா;| **பெரியகுளம்**: ஜேம்ஸ் மேரி; | **கொத்திமங்கலம்**: உமா தேவ ஜோதி; சித்ரா ரூபவதி;|**மதுரை**: ரூத் மீனவர்ஷினி; கனகவல்லி; | **கும்முடிபூண்டி**: சாந்திபால்ராஜி; |**வெம்பக்கோட்டை**: R.மரியாள்; **மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; **மேலப்பத்தை**: விமலா டேனியல்; **இடைக்கால்:** செல்வி ஜான்சன்; |**இளையரசனேந்தல்**:ஜெஸி; |**நத்தைக்காடையூர்**: ஏசையன்; |**பரமத்திவேலூர்**: பாமா; | **தர்மபுரி**: ரூத்; |**அய்யப்பாக்கம்**: அம்மணி;| **உசிலம்பட்டி**: லீலாபாய்; |**பாளையங்கோட்டை**: கலா பிரசாத்; | **அரசூர்**:ரோஸ்லின் சாந்தி; | **ஆம்பூர்:** கிரிஜா சத்தியா; | **கல்லுக்குறி**: டால்டன்; |**சிவகிரிப்பட்டி:** ஆபிரகாம்; | **ஆழ்வார்குறிச்சி**: ஹரில்லா; |**விநாயகபுரம்:** ரெஜினாள் மாணிக்கம்; | **வடவள்ளி**: எஸ்தர் விஜய்; |**முத்துகிருஷ்ணாபுரம்**: ஜெயசீலி ஜான்; |**வீரபாண்டியன் பட்டணம்**: தேவதாஸ்; |**பழையகாயல்**; எலிசபெத்; |**ஏர்வாடி**: மரகதம்; | **ஆழ்வார் திருநகரி**: பனிமலர்; |**காளியப்பநல்லூர்**: மேரி விக்டோரியா; |**பள்ளிக்கரணை**: புவனேஸ்வரி; |**திருநெல்வேலி**: ரெஜினா அமல்ராஜ்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-13
## 2 இராஜாக்கள் (இருப்பிடத்துடன் விடை எழுதவும்)

1. 20 வயதில் ராஜாவாகி எருசலேமிலே 16 வருஷம் அரசாண்ட ராஜா யார்?
2. மயிருடையை தரித்து வார்க்கச்சையை தன் அரையிலே கட்டிக் கொண்டிருந்தவன் யார்?
3. ஒலிமுக வாசலிலே ஜனங்கள் நெருங்கி மிதித்ததினாலே செத்துப்போனவன் யார்?
4. இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவன் யார்?
5. இத்தனை பெரிய காரியத்தை செய்ய நாயாகிய உமது அடியான் எம்மாத்திரம் என்று சொன்னவன் யார்?
6. ஊசாவின் தோட்டத்தில் உள்ள கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டவன் யார்?
7. மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப் போட்டவன் யார்?
8. கர்த்தருக்காக எனக்கு இருக்கிற பக்தி வைராக்கியத்தைப் பார் என்று சொன்னவன் யார்?
9. கண்கள் குருடாக்கப்பட்டு இரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டு பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டவன் யார்?
10. பெண் தீர்க்கதரிசியாயிருந்தவள் யார்?
11. ஏலாவின் குமாரனாகிய இவன் பெயர் என்ன?
12. யோவாசின் தாயின் பெயர் என்ன?
13. மெனாகேம் குமாரனாகிய இவன் பெயர் என்ன?
14. சீரிய ராஜாவின் படைத்தலைவனின் பெயர் என்ன?
15. மனாசே ராஜாவின் தாயின் பெயர் என்ன?
16. ஆகாஸ் ராஜாவின் குமாரனின் பெயர் என்ன?
17. மோவாபின் ராஜாவாகிய இவன் பெயர் என்ன?
18. யோராமின் தாயின் பெயர் என்ன?
19. அகசியாவின் தாயின் பெயர் என்ன?
20. இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனின் பெயர் என்ன?
21. பலாதானின் குமாரனாகிய பாபிலோன் ராஜாவாகிய இவன் பெயர் என்ன?
22. யாபேசின் குமாரனாகிய இவன் பெயர் என்ன?
23. யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரனின் பெயர் என்ன?
24. தன் இராணுவத்தையெல்லாம் கூட்டிக்கொண்டுவந்து சமாரியாவை முற்றிகைப்போட்ட சீரியாவின் ராஜாவாகிய இவன் பெயர் என்ன?
25. ஆமோத்சின் குமாரனாகிய இவன் பெயர் என்ன?

**குறிப்பு:**

1. பெயர், ஊர் பெயர் தெளிவாக எழுதவும்.
2. ஒரு நபர் இரண்டு முறை விடை எழுதி அனுப்பினால் அது தவிர்க்கப்படும்.

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.10.2025



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## திருச்சி மத்திய மண்டல பெண்கள் முகாம்






## Pastors' Wives' Meeting- Pondicherry




## திருவள்ளூர் மண்டல ஆண்கள் ஐக்கிய முகாம்






## வடஇந்திய மிஷனரி பயணம், பஞ்சாப் மாநிலம்





Registered News Paper Regd. No. 8206 / 62




BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664